விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 345 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 13 புதன்கிழமை (29.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சா்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## ஜனாதிபதி ரணிலுடன் இணைந்து
# அரசியல் தீர்வை வென்றெடுங்கள்
### தமிழ்க் கட்சிகளுக்கு பிரதமர் அழைப்பு



(கொழும்பு)
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து அவரின் கரங்களைப் பலப்படுத்தி அரசியல் தீர்வை விரைவாக வென்றெடுக்க தமிழ்க் கட்சிகள் முன்வர வேண்டும் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தமிழ்க் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.
(15ஆம் பக்கம் பார்க்க)

### தொண்டைமானாறில்
## இரட்டைக் குழந்தை பிரசவித்த தாய் மரணம்



(யாழ்ப்பாணம்)
வடமராட்சி தொண்டைமானாறில் இரட்டை குழந்தைகளை பிரசவித்த இளம் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
15

## மின்சாரம் தாக்கியதில் இளைஞன் மரணம்
### சாவகச்சேரியில் சம்பவம்



(சாவகச்சேரி)
மின்சாரம் தாக்கியதில் சாவகச்சேரியில் இளைஞன் ஒருவர் மரணமடைந்துள்ளார்.
சாவகச்சேரிப் பகுதி
15

### இரு நாட்களில்
## சாதாரண தர பெறுபேறு

(கொழும்பு)
கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் இன்னும் 2 அல்லது 3 நாட்களுக்குள் வெளியிடப்
15

### வடமராட்சியில்
## 34 கிலோ கஞ்சா மீட்பு

(யாழ்ப்பாணம்)
வடமராட்சி வெற்றிலைக்கேணி வத்திராயன் பகுதியில் 34 கிலோவுக்கும் அதிகமான கேரள கஞ்சா நேற்று முன்தினம்
15

# நினைவேந்தல் உரிமையை தட்டிப் பறிக்க முடியாது
### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)
இலங்கையில் போரில் உயிரிழந்தவர்களை அவர்களின் உறவுகள் நினைவேந்துவதற்கு முழுமையான உரிமை உண்டு. இந்த விடயத்தில் பாரபட்சம் காட்டக்கூடாது. நினைவேந்தல் உரிமையை எவரும் தட்டிப்பறிக்கவும் முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
(15ஆம் பக்கம் பார்க்க)

### சித்தன்கேணி இளைஞன் மரணம்
## சித்திரவதை செய்யப்பட்ட இடம் விஞ்ஞான ரீதியில் ஆய்வு

(யாழ்ப்பாணம்)
வட்டுக்கோட்டைப்பொலிஸ் நிலையத்தில் இருந்து சித்திரவதைக்குள்ளான நிலையில் உயிரிழந்த நாகராஜா அலெக்ஸ்என்றஇளைஞனை சித்திரவதைக்கு உள்ளாகிய இடத்தில் நேற்று விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்
15

## தேசிய பாதுகாப்புத் தொடர்பில் அச்சப்படத் தேவையில்லை
### அமைச்சர் பந்துல குணவர்த்தன



(கொழும்பு)
தேசிய பாதுகாப்பு குறித்து அச்சப்படத் தேவையில்லை என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.
அரசாங்க தகவல் திணைக்களத்தில்
15

## வடக்கு நோக்கிப் பயணித்த இரு பேருந்துகள் மீது
### அநுராதபுரத்தில் தாக்குதல்



(கொழும்பு)
கொழும்பிலிருந்து வடக்கு நோக்கிப் பயணித்த இரு பேருந்துகள் இனந்தெரி
02

### அபிவிருத்தி உத்தியோகத்தர்களை
## ஆசிரியர் சேவையில் இணைக்க நடவடிக்கை


(கொழும்பு)
அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
ஆசிரியர் சேவைக்கான ஆட்சேர்ப்பு தொடர்பில் கல்வி அமைச்சு விசேட அறிக்கை ஒன்றினை
02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
06 - 07 - 1932



இறப்பு
28 - 11 - 2023

## பொன்னம்பலம் நாகலிங்கம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் அத்தியடி அம்பலவானர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நாகலிங்கம் அவர்கள் நேற்று (28.11.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - திலகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கனகாம்பிகை அவர்களின் அன்புக் கணவரும் நாகேந்திரம், நாகநந்தினி, நாகலோகினி, நரேந்திரன், பவானி, றோகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பேரானந்தம், சாந்தலிங்கம், சௌந்தரி, சௌத்தரி, கிரிஷாந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் தினேஷ், நிரேஷ், விதுஷ்கரன், விஷ்வாகரன், துஷாகரன், மதுஷிகா, ரக்ஷனா, ரக்ஷிதா, றிஷா, 'F'பிஷா, கிஷான், ஹரீஷ், ஹர்ஷா, சரண்யா, சபாட்னி ஆகியோரின் அன்புப் பேரனும் தாருண்யா, ஆரண்யா ஆகியோரின் அன்புப் பூட்டனும் பாப்பாவின் வளர்ப்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (30.11.2023) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

077 310 4510

(18037)

## வடக்கு...

யாதோரால் நேற்று இரவு தாக்குதலுக்குள்ளாகியுள்ளது.

அனுராதபுரம் நொச்சியாகம பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட புத்தளம் - கொழும்பு வீதியில் கொழும்பிலிருந்து வடக்கு நோக்கி இரவில் பயணித்த தனியார் மற்றும் அரச பேரூந்துகள் மீது மோட்டார் வாகனத்தில் வந்த இனந் தெரியாத நபர்கள் கற்களை வீசி தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

வடக்கிலிருந்து கொழும்பில் நடைபெற்ற சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கங்களின் தேசிய மாநாட்டில் பங்குபற்றிவிட்டு திரும்பிய வவுனியாவை சேர்ந்த இரு தனியார் பேருந்துகளில் ஒரு பேரூந்தும், யாழ். நோக்கி பயணித்த இலங்கை அரச போக்குவரத்து சபைக்கு சொந்தமான ஒரு பேரூந்துமே தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. (ம-7,33)

## ஆசிரியர்...

வெளியிட்டுள்ளது. இதன்படி, உயர் நீதிமன்றத் தீர்ப்பின் படி ஆசிரியர் சேவைக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக குறித்த அறிக்கையில் மேலும் அறியத்தருகையில்,

“அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தற்போதும் அரச ஊழியர்களே. 2019 ஆம் ஆண்டில், குறிப்பாக மாகாண பாடசாலைகளில் சுமார் 20,000 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிக்க வாய்ப்பு வழங்கப்பட்டது.

மேலும், இந்தக் குழுவானது ஆசிரியர் சேவை அரசியலமைப்பின்படி ஆசிரியர் சேவையில் உள்வாங்கப்படலாம். இதன்படி, அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கங்களின் இணக்கப்பாட்டுடன், பரீட்சை இடம்பெறும் திகதிக்கு வயது 40 ஆக நீடிக்கப்பட்டு, பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன், ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு, 25.03.2023 அன்று பரீட்சையை நடத்த திட்டமிடப்பட்டிருந்தாலும்,

இந்த அதிகாரிகள் குழு 23.03.2023 அன்று உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து பரீட்சையை நிறுத்தி வைக்க உத்தரவு பெற்றதால், வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது.

வெளிநாட்டு மொழி பட்டதாரிகளை இணைக்க நடவடிக்கை இந்த ஆட்சேர்ப்புக்கு இடையூறு ஏற்படாத வகையில் இந்த வழக்கை விரைவாக முடிக்க கல்வி அமைச்சு விரும்புகிறது.

அதன் பின்னர் ஆசிரியர்களின் ஓய்வு மற்றும் சேவையை விட்டு வெளியேறியமையினால் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு ஆசிரியர் சேவை அரசியலமைப்பின் படி பட்டதாரிகளை இணைத்துக் கொள்ள மாகாண அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஆசிரியர் சேவை அரசியலமைப்பின் படி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் வெளிநாட்டு மொழி பட்டதாரிகளை இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆட்சேர்ப்பு பயிற்சி அபிவிருத்தி அதிகாரிகளின் ஆட்சேர்ப்பை பாதிக்காது.

எனவே, உயர் நீதிமன்ற வழக்கு உடனடியாக முடிவடைந்த பின்னர் பெறப்பட்ட உத்தரவின் பேரில், ஆசிரியர் சேவை அரசியலமைப்பின்படி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.” என குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



உடுவில் சங்குவேலியைப் பிறப்பிடமாகவும்
சுவிஸை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்.

## மாணிக்கம் நடராசா

பிறப்பு
03.02.1950

இறப்பு
29.11.2022

“ சீவியத்தில் என்னை நேசித்த அன்புள்ளங்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள் ”

“ நினைவு கூருகின்றோம் ”
கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும் எங்கள் முன்னே
உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும்
மண்விட்டு மறைந்து நீங்கள் விண்நோக்கிச்
சென்றாலும் கண்விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள்.


சங்குவேலி,
மானிப்பாய்.

(18035)

பாசம் கலையாது நினைவுகூரும்
சந்திரன் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
07 • 10 • 1930

மறைவு
25 • 11 • 2023

# திரு.கந்தர் நடராசா

வடமராட்சி நெல்லியடி வதிரியைப் பிறப்பிடமாகவும் தென்மராட்சி "செல்வவாசா " கண்டுவில் ஒழுங்கை சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.க.நடராசா அவர்கள் (25.11.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் சின்னாச்சியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கண்மணி வள்ளிமுத்துவின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், அப்பையா, மாணிக்கம், இராஜலிங்கம், இராஜபுத்திரன், சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தம்பியும் ஸ்ரீகாந்தன், கருணாவதி, பிறேமாவதி, லீலாவதி, ஜெயகாந்தன், புஷ்பவதி, மாலாவதி, சந்திரகாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பொன்னரியம், ரவீந்திரநாதன், இரத்தினராசா, துரைசிங்கம், நித்தியகலா, குணச்சந்திரதாஸ், செல்வானந்தன், வதனி ஆகியோரின் மாமனாரும் ஜெகன்-ரூபி, ஜெய்கர்-சரண்யா, ஜெயந்தன்-ராதிகா, வைஷ்ணவி-ரகுராம், மீரா-ஜனகன், பவித்திரா-ஜோன்சன், அபிரா-அகர்ஷன், சுகந்தன்-காயத்திரி, சுபாசினி-விமல்ராஜ், சுவேந்தினி-சுதர்சன், தீபா-கரன், சோபா-ரமேஸ், துயானந்-பிரவீனா, சரண்-வித்யா, லவண், கௌதன், ஆர்த்தி, ராஜானந்தன், ஞானானந்தன், மைத்ரேயி, ஹரி, விக்சன் ஆகியோரின் பாசமிகு பேரனும்

கிஷானி, டில்சானி, ஜெய்சரன், குருசரன், கைலன், காஜன், ராணியா, டியான் சியோன், சுபானி, சஷ்மிகா, ஹேசிகன், சித்தார்த், ஹரித், பூமிகா, ஜெய்சன், லைசா, விஹான், ராகேஷ், அட்சகி, ஆரணிகன், ஹோசயன், வைஷிகன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 29.11.2023 இன்று புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11.00 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

"செல்வவாசா"
கண்டுவில் ஒழுங்கை,
சாவகச்சேரி.


T.P:- 077 826 9846
075 832 1990
[illegible]

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# டேவிஸ் கிண்ணம் சம்பியனான இத்தாலி




47 வருடத்திற்குப் பிறகு சம்பியன் பட்டத்தை கைப்பற்றிய இத்தாலி.

கிரிக்கெட்டில் உலகக்கோப்பையைப் போன்று டென்னிஸில் டேவிஸ் கோப்பை போட்டி தொடர் நடத்தப்பட்டு வருகிறது. இந்த முறை ஸ்பெயினில் இந்தத் தொடர் நடைபெற்றது.

இந்தத் தொடரின் இறுதிப் போட்டிக்கு அவுஸ்திரேலியா மற்றும் இத்தாலி அணிகள் முன்னேறின. இதில் 2-0 என்ற கணக்கில் இத்தாலி அணி வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இறுதிப்போட்டியில் இத்தாலி வீரரான ஜானிக் சின்னர் அவுஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினாரை 6-3, 6-0 என்ற கணக்கில் வீழ்த்தியதன் மூலம் கோப்பையை வெல்வதில் முக்கிய பங்கு வகித்தார்.

1976 ஆம் ஆண்டுக்குப் பிறகு இத்தாலி அணி டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியில் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (5-6)

# ஐ.பி.எல் கிரிக்கெட்டில் விளையாட விருப்பம்



பாகிஸ்தான் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஹசன் அலி, ஐ.பி.எல் கிரிக்கெட்டில் விளையாட விருப்பம் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஹசன் அலி கூறுகையில் "ஒவ்வொரு வீரரும் ஐ.பி.எல் போட்டியில் விளையாட விரும்புகிறார்கள். நானும் அங்கே சென்று விளையாட விரும்புகிறேன்.

உலகத்தில் உள்ள மிகப்பெரிய லீக்கில் ஐ.பி.எல் லீக்கும் ஒன்று.

எதிர்காலத்தில் வாய்ப்புக் கிடைத்தால் நிச்சயம் விளையாடுவேன்" என்று தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல் 2024 சீசனுக்கான வீரர்கள் ஏலம் துபாயில் அடுத்த மாதம் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# தலைவராகும் கில்



இந்தியன் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் குஜராத் டைட்டன்ஸ் அணியின் கப்டனாக ஷிப்மன் கில் நியமிக்கப்பட்டுள்ளார். அணியின் இயக்குநர் குழுவின் முடிவின்படி அவர் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முன்னதாக குஜராத் டைட்டன்ஸ் அணிக்கு ஹர்திக் பாண்டியா கப்டனாக இருந்தார். அவர் தற்போது மீண்டும் மும்பை அணியுடன் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மருந்து பிரச்சினைகளை ஆராய 3 துப்பறியும் குழுக்கள்

(கொழும்பு)

நாட்டிற்குத் தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்தல் உட்பட சுகாதார அமைச்சின் பல பிரச்சினைகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு குற்றப்புலனாய்வு திணைக்களம் மூன்று குழுக்களை நியமித்துள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டுள்ள புலனாய்வுப் பிரிவினர், போலியான ஆவணங்களைத் தயாரித்து போலியான மனித இம்யூகுளோபுலின் தயாரித்த நிறுவனத்தில் பணிபுரிந்த பணியாளர்கள், முன்னாள் சுகாதார செயலாளர் உட்பட சுமார் 30 சுகாதார அமைச்சின் அதிகாரிகளிடம் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சிஐடி தெரிவித்துள்ளது. (5-6)

# ஒரு லட்சம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி-அமரவீர



(கொழும்பு)

கீரிச்சம்பாவிற்கு இணையான 100,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த அரிசி கையிருப்பின் மூலம் அரிசிவிலை உயர்வைக் கட்டுப்படுத்தி அரிசித் தட்டுப்பாட்டை நீக்க முடியும் என அரசாங்கம் நம்புவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கண்காட்சியின் போது, கீரிச்சம்பா தட்டுப்பாடு குறித்து அமைச்சரிடம் பொது மக்கள் கேட்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு குறிப்பிட்ட அரிசி வியாபாரிகள் கீரிச்சம்பா மற்றும் சம்பா அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படுத்தியுள்ளனர். ஆனால் நாட்டில் போது மான அளவு அரிசி மற்றும் நெல் இருப்பு உள்ளது. (5-6)


## மேல் நீதிமன்றம் - யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல்

பின்வரும் நீதிமன்றங்களில் 2024 ஆம் ஆண்டுக்கான சிற்றுண்டிச்சாலை சேவையினை வழங்குவதற்கு கேள்விப் பத்திரங்கள் தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

1. மேல் நீதிமன்றம் - யாழ்ப்பாணம்
2. மாவட்ட நீதிவான் நீதிமன்றம் - மல்லாகம்
3. மாவட்ட/ நீதிவான் நீதிமன்றம் - சாவகச்சேரி
4. மாவட்ட/நீதிவான் நீதிமன்றம் - ஊர்காவற்றுறை

எனவே சிற்றுண்டிச்சாலை சேவையினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவங்களையும் மேலதிக விபரங்களையும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற கணக்கு கிளையில் மீளளிக்க முடியாத வைப்பாக ரூபா 100.00ம் மீளளிக்கக்கூடிய வைப்பாக ரூபா. 5000.00ம் செலுத்தி 13.12.2023 ஆம் திகதி பி.ப 1.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் 13.12. 2023 பி.ப 3.00 மணிவரை ஏற்றுக்கொள்வதுடன் பி.ப 4.00 மணிக்கு விலைமனுக்கள் கேள்விதாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒவ்வொரு நீதிமன்றங்களுக்கும் சிற்றுண்டிச்சாலை சேவையினை மேற்கொள்வதற்காக தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

**மேல் நீதிமன்ற நீதிபதி,**
**மேல் நீதிமன்றம்,**
**யாழ்ப்பாணம்.**

(சி-7747)



# மக்கள் வங்கி
## பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கியாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/சேவை மையங்களில் 31.08.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட 14.12.2023ஆம் திகதி வரை மீட்டெடுக்கப்படாத/புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

### ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 15.12.2023 மற்றும் 16.12.2023

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | யாழ் ஸ்ரான்லிவீதிக் கிளை |
|---|---|
| கிளை | யாழ்/ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித் துறை, யாழ்.பல்கலைக்கழகம், யாழ்/கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம். |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில்(நாவலர்வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி. |

இந்த ஏலங்களை மறுஅறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இல: 021 -222-2601**

PEOPLE'S BANK
THE PULSE OF THE PEOPLE

(சி-7748)


# இராசிபலன்

29.11.2023
கார்த்திகை 13, புதன்கிழமை
துதியை பிற்பகல் 2.50 மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 3.18 மணிவரை

சுபநேரம் -4.43-6.13 மணிவரை
இராகுகாலம்-12.13-1.43 மணிவரை

சந்திராஷ்டமம்
விசாகம், அனுசம்.

**வளவன்**

**மேஷம்**
குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**ரிஷபம்**
சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வியாபார விருத்தியுண்டு, தொலைபேசித் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்.

**மிதுனம்**
ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், கற்பனை மிகுதியான நாள்.

**கடகம்**
தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சுபகாரியச் செய்கையில் தாராளம் காட்டுவீர்கள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்**
இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழில் வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**கன்னி**
புதிய திட்டங்கள் தீட்டி தொழில் ஆதாயம் காண முற்படுவீர்கள், காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்**
தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், தொலைபேசி வழியில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும்.

**விருச்சிகம்**
எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.

**தனுசு**
ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வெளியூர் பயணங்களால் நன்மையுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்**
சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்**
நட்பு வட்டம் விரிவடையும் நாள், புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு, சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.

**மீனம்**
புதிய நபர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம்.

**ஒருவர் பழகும் முறை அவர் உள்ளத்தை திறந்து காட்டும் கண்ணாடி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனை நிலையங்களில் நாளைமுதல் விசேட சுற்றிவளைப்பு

## நுகர்வோர் அதிகாரசபை

(கொழும்பு)

பண்டிகைக் காலங்களில் முறைகேடுகளைத் தவிர்ப்பதற்காகவும் தட்டுப்பாடு இன்றி பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் நாளை முதல் ஜனவரி மாதம் 15ஆம் திகதி வரை இந்த விசேட சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், சந்தைக்கு விநியோகிக்காமல் வைக்கப்பட்டிருந்த 2 ஆயிரம் மெற்றிக் தொன் சீனியைிருப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

25 சதம் வரியில் இறக்குமதி செய்யப்பட்ட சீனி அரசாங்கம் கையகப்படுத்தி 275 ரூபாய் என்ற சில்லறை விலையில் நுகர்வோருக்கு வழங்கப்படுவதாக வர்த்தக வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# கொக்குத்தொடுவாய்-முல்லை மையப்புள்ளி வரை மனித புதைகுழி விஸ்தரிப்பு

(நெளுக்குளம்)

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியானது கொக்குத்தொடுவாய் - முல்லைத்தீவு மையப்புள்ளி வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட விஷேட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவ தெரிவித்துள்ளார்.

ஏழாவது நாளாக தொடர்ந்த கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வாய்வு நேற்று முன்தினம் நிறைவடையும் போது மூன்று மனித எலும் புக்கூட்டு தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டிருந்தது.

மேலும் இதுவரை 37 எலும்புக்கூட்டு தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் கடந்த வாரத்தில் இடம்பெற்ற விஷேட ராடர் பரிசோதனையின் போது குறித்த மனிதபுதைகுழியானது கொக்குத்தொடுவாய் - முல்லைத்தீவு நெடுஞ்சாலையின் மையப்புள்ளி வரை விஸ்தரிக்கப்பட்டு செல்வது அவதானிக்கப்பட்டுள்ளது. (5-6-299)

# புலிச்சின்னம் பொறித்த ஆடை அணிந்த நபர் கைது

(சாவகச்சேரி)

கொடிகாமத்தில் நேற்று முன் தினம் பிற்பகல் இடம்பெற்ற மாவீரர் நினைவேந்தல் நிகழ்வின் போது தலைவர் பிரபாகரன் மற்றும் புலிச்சின்னம் ஆகியவை பொறித்த ரீசேட்டுடன் வந்த இளைஞனை நேற்று செவ்வாய்க்கிழமை காலை பொலிஸார் கைது செய் துள்ளனர்.

கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 24 வயதான இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருவதுடன் இளைஞனை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளனர். (5-6-30)

# தருமபுரத்தில் இடம்பெற்ற விழிப்புணர்வு நாடகம்



(கண்டாவளை)

கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் போதைப்பொருள் அற்ற தேசத்தை உருவாக்குவோம் எனும் தொனிப் பொருளிலான விழிப்புணர்வு நாடக அரங்கு நேற்று இடம்பெற்றது.

பதினாறு நாள் செயற்றிட்டத்தின் முதல் நிகழ்வான போதைப்பொருள் அற்ற தேசத்தை உருவாக்குவோம் தொடர்பான விழிப்புணர்வு நாடக அரங்கு கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம் பகுதியில் பெண்கள் வாழ்வுரிமை சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதன்போது போதைப் பொருளில் இருந்து விடுபட்டு சுகதேகியாகவும் நலமாகவும் நோயற்றவர்களாக, சந்தோசமான வாழ்க்கையை வாழ்வதற்கு ஏற்ற கருத்துக்கள் நிறைந்த நாடகம் அரங்கேற்றப்பட்டது. (5-6-315)

# கே.கே.எஸ் பகுதியில் களவாடப்படும் கட்டுமானப் பொருட்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன் துறைப் பகுதியில் துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான சீமெந்து தூண்களை உடைத்து அவற்றின் கம்பிகளை திருடர்கள் திருடிச் செல்வதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

குறித்த பகுதி காணிக்குள் அத்துமீறிநுழையும் திருடர்கள் அங்கு காணப்படும் துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான தூண்களை உடைத்தும் கம்பிகளை களவாடியும் பெறுமதியான பல தூண்கள் காணப்படும் நிலையில் அவற்றினை இரும்புக்காக உடைத்துச் சேதப்படுத்தியும் இரும்புகளையும் திருடிச் செல்கின்றனர். எனவே இது தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (5-6-33)

# தேசியமட்ட போட்டியில் உடுவில் மகளிருக்கு 4 முதலிடங்கள்



(யாழ்ப்பாணம்)

தேசியமட்ட போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள் நான்கு முதலிடங்களை பெற்றுள்ளனர்.

அகில இலங்கை தேசிய மட்ட போட்டிகள் அண்மையில் அநுராதபுரத்தில் நடைபெற்றது. இதில் தனிநடனம், பல்லியகுழு, தனிவயலின் மற்றும் தனிப்பாடல் ஆகிய போட்டிகளில் உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள் முதலாமிடத்தினை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (5-6)



இலங்கை இராணுவத்தின் 4 ஆவது இராணுவ மருத்துவ படையணியின் 16 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் கடந்த 24ஆம் திகதி இரத்த தானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

(படம்: சிவசாந்தன்)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அல்வாய் வடக்கு குருக்கட்டு அரசடி விநாயகர் ஆலய 82 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் டிசெம்பர் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆலய மண்டபத்தில் தலைவர் பே.வரோதயன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (5-6)

# கரணவாயில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

கரணவாய் குஞ்சர் கடைப் பகுதியில் பல்பொருள் வாணிபம் ஒன்று உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் கடை உரிமையாளர் கடையை திறந்து பார்த்த வேளை 75,000 ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளமை தெரிய வந்ததை அடுத்து கடை உரிமையாளர் சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸாரிடம் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார். (5-6)

# பச்சிலைப்பள்ளி அறந்திநகர் பாதை புனரமைப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் அறத்திநகரில் உள்ள கழிவுகளை மீள்சுழற்சிக் குட்படுத்தும் இடத்திற்கு செல்வதற்கானபாதையின் புனரமைப்பு பணிகள் மாகாண உள்ளூராட்சி அமைச்சின் 3.5 மில்லியன் ரூபாய் செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட அறத்திநகர் பகுதியில் அமைந்துள்ள கழிவுகளை மீள்சுழற்சிக்குட்படுத்தும் இடத்திற்கு செல்வதற்கான பாதை சீராக இல்லாத நிலையில் அதற்கான புனரமைப்பு பணிகள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் மாகாண உள்ளூராட்சிஅமைச்சின் 3.5 மில்லியன் ரூபாய் செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-6-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீரிகம இறப்பர் தொழிற்சாலையில் தீ விபத்து



(கொழும்பு)

மீரிகம, டான் ஓவிட்ட பகுதியில் உள்ள இறப்பர் தொழிற்சாலையில் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு இந்த தீ விபத்து ஏற்பட்டது.

இரசாயனங்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்த பகுதியில் தீ பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை எனவும் தீயை அணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தீயணைப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (5-6)

# சீனி உற்பத்தியை அதிகரிக்க கலப்பின கரும்பு வகைகள் ஆய்வு

(கொழும்பு)

எதிர்காலத்தில் உள்ளூர் சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்காக பயன்படுத்தக்கூடிய புதிய கலப்பின கரும்பு வகைகளை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை சீனி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கரும்பு செய்கை நிலத்தின் அளவை அதிகரித்து உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை சீனி நிறுவனத்தின் செயற்பாட்டு அதிகாரி கலும் பிரியங்கர தெரிவித்தார்.

செவனகல, பல்வத்த உள்ளிட்ட அரசாங்கத்திற்கு சொந்தமான நான்கு சீனி தொழிற்சாலைகள் தற்போது நாட்டின் சீனி தேவையில் இருபது வீதத்தை மாத்திரமே உற்பத்தி செய்வதாகவும் மீதி எண்பது வீதம் வருடாந்தம் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (5-6)

# ராஜபக்ஷக்களுக்கு எதிராக மக்கள் வழக்குத் தொடர வேண்டும்

(கொழும்பு)



பொருளாதார நெருக்கடிக்கு பிரதிவாதிகளாக உச்சநீதிமன்றத்தி னால் பெயரிடப்பட்டுள்ள ராஜபக்ஷக்களுக்கு எதிராக மாவட்ட நீதிமன்றங்களில் நஷ்டஈடு கோருவதற்கு மக்கள் முன்வர வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மத்தேகொட பிரதேசத்தில் இடம்பெற்ற கட்சி பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மருந்து கிடைக்காமல் இறந்தவர்களின் உறவினர்கள், எரிவாயு வரிசையில் இறந்தவர்களின் உறவினர்கள், எரிவாயு வெடித்து இறந்தவர்களின் உறவினர்கள், எரிபொருள் வரிசையில் இறந்தவர்களின் உறவினர்கள் இதில் முன்னிலை வகிக்க வேண்டும்.

ராஜபக்ஷ சகோதரர்களுக்கு எதிராக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை அடுத்து, அவர்களின் குடியுரிமையை பறிக்க வேண்டும் என்ற கோரிக்கை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-6)


## விசேட அறிவித்தல்!

தேசிய லொத்தர் சபையின் லொத்தர்களின் இறுதி இலக்கங்கள் இரண்டை அடிப்படையாகக் கொண்டு சட்டத்துக்குப் புறம்பான பந்தயம் பிடித்தல் நாடு முழுவதும் இடம்பெறுவதாக தகவல்கள் கிடைக்கின்றபடியால் நீங்கள் இந்த செயலில் ஈடுபடுதல், உற்சாகப்படுத்துதல், உதவுதல் அல்லது பங்கு பற்றுதல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

தேசிய லொத்தர் சபையின் தகவல்.

National Lotteries Board

(சி-2176)



## அன்பு வாசகர்களே!

## உங்கள் வலம்புரி

## இப்போது...

## இல. 191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

எனும் முகவரியில் இயங்குகிறது.

(யாழ். பிறவுண் வீதியில் அரசடிச் சந்திக்கும் கலட்டி சந்திக்கும் இடையில்)

மேலதிக தொடர்புகளுக்கு

076 097 3121

021 222 3378


# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 25 சீனிவாசகம் வீதி, ஆதன இல 16 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் இராசம்மா நடராஜா என ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை மேற்கு சின்னப்பொடியர் கந்தப்பா முருகேசுவும் பெண் செல்லமும் அவர்கள் 17.01.1948 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஆர்.காராளசிங்கம் முகதாவில் 1291 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை மேற்கு கே.கே.நடராஜா பெண் இராசம்மாவுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை வேலுப்பிள்ளை கந்தையாவும், பொன்னுத்துரை ஸ்ரீபத்மநாதனும், பொன்னுத்துரை ஸ்ரீரங்கநாதனும், பொன்னுத்துரை ஸ்ரீகந்தராஜனும், பொன்னுத்துரை ஸ்ரீனிவாசனும், சரவணமுத்து வேலுப்பிள்ளை மகள் பூமணியும், சின்னப்பு செல்லப்பா பொன்னுத்துரை பெண் செல்வரத்தினம் ஆகியோர் 19.08.1979 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு மொகமட் மொகிடீன் மஞ்சூர் முகதாவில் 1042 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் கந்தமுத்து நடராஜா கைம்பெண் இராசம்மாவுக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை நடராஜா கைம்பெண் இராசம்மா முதுசமாக நடராஜா சத்தியமூர்த்திக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை நடராஜா சத்தியமூர்த்தி முதுசமாக நடராஜா சத்தியமூர்த்தி மகள் சீதாலெட்சுமி, நடராஜா சத்தியமூர்த்தி மகன் நதன் சத்தியாவிற்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை 14.02.2016 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ரட்ணம் ரகுராஜா முகதாவில் 7869 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதிமூலம் நடராஜா சத்தியமூர்த்தி மகள் சீதாலெட்சுமி, நடராஜா சத்தியமூர்த்தி மகன் நதன் சத்தியாவிற்கு வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கு இறை "பல்லுவிளித்தோட்டம்" நிலப்பரப்பு 1 குளி 8 7/8 நில அளவையாளர் எம்அலோசியஸ் 18.01.1946 ஆம் திகதி அளந்து விடுத்த 136 ஆம் இலக்கப் படத்தின்படி நிலப்பரப்பு ஒன்றுடன் குளி எட்டுடன் எட்டில் மேல் ஏழு உம் வீடும் கிணறும்.

கிழக்கு : தியாகன் அருணாசலத்தின் ஆதனம்.
வடக்கு : வீதி.
மேற்கு : சின்னப்பொடியர் காண்டீபன் முருகேசு பெண் செல்வத்தின் ஆதனம்.
தெற்கு : கந்தமுத்து நடராஜா கைம்பெண் இராசம்மாவின் ஆதனம். இதனடங்கலிற் சொரியலாய் அரைப்பங்கு.

தற்போது அற்றோனித்தத்துவக்காரர் சண்முகநாதன் பிரசாந்தன் மூலம் நடராஜா சத்தியமூர்த்தி மகள் சீதாலெட்சுமி, நடராஜா சத்தியமூர்த்தி மகன் நதன் சத்தியாவும் இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோரா விடத்து குறித்த ஆதனமானது நடராஜா சத்தியமூர்த்தி மகள் சீதாலெட்சுமி, நடராஜா சத்தியமூர்த்தி மகன் நதன் சத்தியா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(சி-7743)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## துபாய் பயணிக்கவுள்ள பிரதமர் நரேந்திர மோடி



(அபுதாபி)
துபாயில் இடம்பெறவுள்ள உலக பருவநிலை செயல் மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி ஐக்கிய அரபு அமீரகத்திற்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பயணிக்கவுள்ளார்.
ஐக்கிய அரபு அமீரகத்தின் ஜனாதிபதி ஷேக் முகமது பின் ஜயத்தின் அழைப்பை ஏற்று பிரதமர் துபாய் செல்லவுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.
இந்த மாநாட்டுக்கு இடையில் பல்வேறு நாட்டுத் தலைவர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.(5-6)

## மக்கள் செல்வாக்கை பெற உத்திகளை கையாளும்

### ஜஸ்ரின் ட்ரூடோ

(ஒட்டாவா)
கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ, மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்து வரும் நிலையில் அதனை சரி செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.
தனக்கான மக்கள் செல்வாக்கினை மேம்படுத்தும் நோக்கில் சந்தைப்படுத்தல் உத்திகளை பிரதமர் பின்பற்ற உள்ளார்.
பிரதமர் ட்ரூடோ, தனது தொடர்பாடல் நிறைவேற்றுப் பணிப்பாளராக பிரபல சந்தைப்படுத்தல் நிபுணரான மெக்ஸ் வலிக்குவாட்டை நியமித்துள்ளார்.
எதிர்வரும் டிசெம்பர் மாதம் தொடக்கம் பிரதமரின் தொட ர்பாடல் பிரிவிற்கு வலிக் குவாட் பொறுப்பேற்றுக் கொள்ள உள்ளார்.
உலகின் முன்னணி சந்தைகளில் பண்டக்குறிகளை பிரபல்யப்படுத்துவதில் நிபுணராக வலிக்குவாட் திகழ்கின்றார் என தெரிவிக்கப்படுகின்றது.
மக்கள் மத்தியில் தனது செல்வாக்கினை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ளும் நோக்கில் பிரதமர் இவ்வாறான நடவடிக்கைகளை எடுத்துள்ளார். (5-6)

# யூத எதிர்ப்பு வ...

# வருந்தத்தக்க...

(ஒட்டாவா)

**மொன்ட்ரியல் பகுதியில் உள்ள யூதசபை கட்டட... நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கடு... தெரிவித்துள்ளார்.**




நேற்று முன்தினம் அதிகாலையில் யூத சமூக சபையின் கட்டிடத்தின் நுழைவாயிலில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இச்சம்பவத்திற்கு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், நேற்று மொன்ட்ரியல் யூத சமூக சபை கட்டடத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலை நான் வன்மையாக கண்டிக்கிறேன். இந்த தொடர்ச்சியான யூத எதிர்ப்பு வன்முறை செயல்கள் வருந்தத்தக்கவை மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாதவை. உடனடியாக இது நிறுத்தப்பட வேண்டும். இது போன்ற கீழ்த்தரமான, வெறுக்கத்தக்க செயல்களுக்கு எதிராக நாம்


அ... டும்... ஓ... இ... ங்கி... மொ... மற்... வெ... நியு...
இ... விச... என... ரியல்... மீது... கப்ப... தாக்...

## பப்புவா நியூகினியாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

(மொசெபீ)
பப்புவா நியூகினியாவின் வடக்கு கடற்கரையில் நேற்று 6.5 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.
பசுபிக்தீவு மாநிலத்தின் கிழக்கு செபிக் மாகாணத்தின் தலைநகரான வெகாக் நகரத்திலிருந்து சிறிது தொலைவில் உள்ள கடற்கரையிலிருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் இந்நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.
காலை 8.46 மணிக்கு 12 கிலோமீற்றர் (ஏழு மைல்) ஆழத்தில் நிலநடுக்கம் கண்டறியப்பட்டதாக யு.எஸ்.ஜி.எஸ் தெரிவித்துள்ளது. (5-6)

# புலம்பெய...
# மாவீரர்...




## ஏடென் வளைகுடாவில் இஸ்ரேலிய எண்ணெய் கப்பல் மீது தாக்குதல்




(வோஷிங்டன்)
ஏடென் வளைகுடாவில் தாக்குதலிற்குள்ளான இஸ்ரேலிய கப்பலை அமெரிக்க கடற்படை காப்பாற்றியுள்ளதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.
இஸ்ரேல் -ஹமாஸ் அமைப்பினருக்கு இடையில் போர்ச்சூழல் நீடித்த நிலையில் தற்போது அங்கு போர் நிறுத்தம் நடைமுறையில் உள்ளது.
எனினும் ஆங்காங்கே இந்த போரின் எதிரொலிகள் நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றன.
ஏடன் வளைகுடாவில் சென்ரல் பார்க் என்ற எண்ணெய் கப்பல் அவசர அழைப்பை விடுத்து காப்பாற்றுமாறு வேண்டுகோள் விடுத் ததைத் தொடர்ந்து கப்பல் உதவிக்குச் சென்றது.
மேலும் இஸ்ரேலிய எண்ணெய் கப்பலின் மாலுமிகள் பாதுகாப்பாக உள்ளனர் என அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது.
கப்பலை கைப்பற்ற முயன்ற வர்கள் யார் என்பது குறித்து அமெரிக்கா எதனையும் தெரிவிக்கவில்லை. எனினும் ஏமனிலிருந்து ஏவுகணைகள் செலுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறைகள்

# கவை-ட்ரூடோ

## கட்படத்தின் மீது
## டா கடும் கண்டனம்



அனைவரும் ஒன்றுபட வேண்டும் என தெரிவித்துள்ளார். ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி இஸ்ரேல் - ஹமாஸ் போர் தொடங்கியதில் இருந்து கனடாவின் மொன்ட்ரியல் பகுதியில் இஸ்லாம் மற்றும் யூதர்களுக்கு எதிராக 324 வெறுப்பு சம்பவங்கள் அரங்கேறியுள்ளதாக பதிவாகியுள்ளன.

இதுதொடர்பாக மேலும் 118 விசாரணைகள் திறக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் மொன்ட்ரியல் பகுதியில் உள்ள யூத சபை மீது பெற்ரோல் நிரம்பிய தீ வைக்கப்பட்ட போத்தல்கள் வீசப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து தகவல் அறிந்த தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து தீ பரவாமல் கட்டுப்படுத்தினர். மேலும் மொன்ட்ரியல் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (5-6)

## இஸ்ரேல்-ஹமாஸ் போர் நிறுத்தம் மேலும் 2 நாட்களுக்கு நீடிப்பு



(காசா)

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் நிறுத்த ஒப்பந்தம் நேற்றுடன் முடிவடைய இருந்த நிலையில், தற்போது மேலும் 2 நாட்களுக்கு போர் நிறுத்தமானது நீட்டிக்கப்பட்டுள்ளது என்று கத்தார் தெரிவித்துள்ளது.

மனிதாபிமான அடிப்படையில் நிவாரண உதவிகளை வழங்க 2 நாட்கள் போர் நிறுத்தம் செய்யப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்புக்கும் இடையிலான நான்கு நாட்களுக்குரிய தற்காலிக மோதல் தவிர்ப்பு நிலை நேற்றுடன் முடிவுக்கு வரும் நிலையில், அதனை மேலும் நீடிக்கும் வாய்ப்புகள் குறித்து இரண்டு தரப்புக்களும் ஆய்வு செய்து வருகின்றன.

இஸ்ரேலியர்களும் பாலஸ்தீனர்களும் நிம்மதியாக வாழ நீண்டகால தீர்வை நோக்கி முன்னேறும்படி அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வலியுறுத்திய அதேவேளை, இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே நீண்டகால போர் நிறுத்தம் ஒன்றுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுக் கொள்கைத் தலைவர் ஜோசப் பொரெல் அழைப்பு விடுத்துள்ளார். (5-6)

# பயர்ந்த உறவுகளால்
# ர் நாள் அனுஷ்டிப்பு



அவுஸ்திரேலியா






**தமிழின மக்களுக்கான உரிமைப்போரில் உயிர்நீத்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் புலம்பெயர்ந்த உறவுகளால் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.**

## நியூசிலாந்தில்

# புகைத்தல் தடையை நீக்கிய புதிய அரசாங்கம்

(வெலிங்டன்)

புதிதாக பொறுப்பேற்றுள்ள நியூசிலாந்து அரசாங்கம், தமது நாட்டில் புகைத்தலுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையினை நீக்க தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் வரி வருமானத்தை அதிகரிக்க முடியுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

முந்தைய ஜசிண்டா ஆடேனின் தலைமையிலான அரசாங்கம் அடுத்த வருடம் முதல், 2008 ஆம் ஆண்டின் பின்னர் பிறந்தவர்களுக்கு சிகரெட் விற்பனைக்கு தடைவிதித்திருந்தது.

நியூசிலாந்தில் அதிகம் இறப்பு வீதம் புகைத்தலினாலேயே ஏற்படுவதனாலும் இளம் பராயத்தவர்களை புகைத்தலில் இருந்து தடுப்பதற்குமாகவே



இந்தச் சட்டம் வரையப்பட்டது.

இந்தநிலையில் புதிய அரசாங்கம் இந்தச் சட்டத்தை மாற்ற தீர்மானித்துள்ளது.

இதற்கு மருத்துவ நிபுணர்கள் தமது கடுமையான ஆட்சேபனைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

முந்தைய அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்ட இந்த சட்ட மறுசீரமைப்பு சர்வதேச ரீதியாக பாராட்டுக்களை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக உயிர்ப்பொருளாதாரத்தில் எமது தேசம் உயிர்ப்புப் பெறுமா?



**பேராசிரியர் கு.மிகுந்தன்**
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

நாம் ஓர் அழகிய தீவில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். பொருளாதார சிக்கலில் நாமாக சிக்குண்டு அதிலிருந்து வெளியேற முடியாமல் திக்கித் திணறிக் கொண்டிருக்கின்றோம். பொருளாதார சுமை மீண்டும் மீண்டும் எம்மவர்களை சுமக்க வைக்கும் கழுதைக் கதையாக நீண்டு போகின்றது. நொந்த மக்களை மீண்டும் நோகடிக்கும் வரிச்சுமைகள் பல வகைகளில் மக்களை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றது. மீள முடியுமா என்பதே எங்கும் கேள்வியாக எழுந்து நிற்கின்றது. எமக்கான வளத்தை நாம் தேடிக் கொண்டிருக் கின்றோம். ஆனால் இருக் கின்ற வளங்களை கண்டும் காணாமலும் இன்னொருசாரர் பசும் பசை தேடியோடிக் கொண்டிருக்கும் நிலையில் புலம்பெயர்ந்து பொருளீட்டிக் கொண்டவர்கள் மீண்டும் தாய்த் தேசம் புகுந்து பலவகை தொழிற்றுறைக்குள் தங்களை இணைத்துக் கொண்டுமிருக்கின்றனர். எமது நாடும் புலம்பெயர் வாளர்களின் நிதிவளத்தை நம்பியிருக்கும் நிலைக்கு வந்திருக்கின்றது.

காலச்சுழற்சி எப்படியெல்லாம் மாற்றமடைந்து செல்கின்றது. எமக்குள்ள உயிர்ப்பல் வகைமையை முழுவதுமாக இனங்கண்டு வளத்தை பெருக்கி அதனை வினைத்திறனாக மாற்றி எமக்கான வசதி வாய்ப்புக்களை பெருக்குவதே தற்போதுள்ள நிலைமையாக எழுந்திருக்கின்றது. எமது தேசத்தில் உற்பத்தியாகும் பொருட்கள் வெளிநாட்டுச் சந்தையை முனைப்புடன் நிரப்பும் போது எமது தேசத்தின் உயிர்ப் பொருளாதாரத்திலும் உந்துதல் கிடைக்கும்.

உயிர்ப்பொருளாதாரம் (Bioeconomy) என்பது பேண்தகு பொருளாதாரத்தை நோக்கிய செயலூக்கத்தில் பொருளாதாரத்தை வளப்படுத்தும் சேவைகளுக்கான உற்பத்திகள், தகவல்கள், சேவைகள் என்பனவற்றை வழங்குவதற்காக உயிர் வளங்களை உற்பத்தி செய்தலும் பயன்படுத்தலும் பாதுகாத்தலும் இவற்றுடன் உயிர் வளங்கள் சார்ந்த தகவலை விஞ்ஞானத்தை, தொழில்நுட்பத்தை இன்னும் கண்டுபிடிப்புக்களை வழங்குதலாகும். இந்த வகையில் எமது தேசத்து உயிர் வளங்கள் முழுவதுமாக இனங்காணப்பட வேண்டும் என்பதுடன் அதிலுள்ள உயிர்ப்பல்வகைமையை மேற்கொண்டு பாதுகாப்பதற்கும் அதனை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கும் இன்னும் உயிர்ப்பல் வகைமையின் தனித்துவத்தை வெளிக் கொணர்வதற்கும் வழிவகை செய்தல் வேண்டும்.

எமது தேசத்து உயிர் வளங்களை இன்னும் நாம் முழுவதுமாக பயன்படுத்தவில்லை. இதனை முறையாக இனங்கண்டு இருக்கின்ற உயிர் வளங்களை முழுமையாக ஆவணப்படுத்தினால் ஏனைய நாடுகளில் நடைமுறையிலுள்ள உயிர்ப்பொருளியல் போன்று இங்கும் உயிர் வளங்களை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்திகளை மேற்கொண்டு பேண்தகு பொருளாதாரத்தை நோக்கிய செயலூக்கத்தில் எம்மை வழி நடத்தி செல்லலாம். இருபத்தோராம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே உயிர்ப் பொருளாதாரம் முனைப்புக் காட்டத் தொடங்கியது. ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் செயற்பாட்டில் உயிர்த் தொழில்நுட்பத்தை மேம்படுத்தி அதிலிருந்து புதிய உற்பத்திகள் மற்றும் சந்தைப்படுத்தல் வாய்ப்புக்களை உருவாக்கலாம்.

உயிர்ப்பொருளியலில்மேலைத்தேய நாடுகளில் நடைமுறையிலுள்ள பல வகை உதாரணங்களை குறிப்பிடலாம். குறிப்பாக உணவுத் தொகுதியினை உயிர்ப் பொருளியலின் பாரிய சந்தைப்படுத்தல் முனையமாக காணலாம். இதில் பேண்தகு விவசாயம், பேண்தகு மீன்பிடியியல், வனவளம் மற்றும் நீருடக வளர்ப்பு இவற்றுடன் உணவு மற்றும் தீவன உற்பத்திகள் என்பன வற்றைக் கூறலாம். இவை தவிர உயிர்ப் பிளாஸ்திக்குகள், உயிர்ப் பிரிந்தழியக் கூடிய உடைகள் என்பனவும் உள்ளடங்குகின்றன. உயிர்ப்பொருளியலினூடாக உணவுப் பாதுகாப்பு, பசுமை வேலை வாய்ப்புக்கள், உள்ளூர் பொருளாதார அபிவிருத்தி, கால நிலை மாற்றத்தினாலான விளைவை சீர்செய்தல், உயிர் பல்வகைமையினை பாதுகாத்தல், மாசுக்களை குறைத்தல், பெண்கள், இளையவர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் போன்றோருக்கான வாழ்வாதாரத்திற்கான வழிவகைகள், பாரம்பரிய முறைமை, பயிர்கள், அது சார்ந்த அறிவு என்பனவும் உள்ளடங்கும்.

இக் கருத்துக்களுடனிணைந்து வட்ட உயிர்ப் பொருளாதாரம் (Circular Bioeconomy) என்பதும் பொதுமைப்படுத்தப்படுகின்றது. உயிர்ப்பொருளியல் பேண்தகு அபிவிருத்தியையும் அதனுடனான மீள் பயன்பாட்டினையும் உள்ளடக்கியிருக்கின்றது. குறிப்பாக வட்ட உயிர்ப் பொருளியலினினூடாக உற்பத்தி, பயன்பாடு, மீள்பயன்பாடு, மீள் சரிசெய் தல் மற்றும் அவற்றை மீள் சுழற்சி செய்தல் என்னும் செயற்பாடுகளுக்கூடாக வளங்களை வினைத்திறனாக பயன்படுத்தல் சாத்திய மாகின்றது. இவையனைத்தும் உயிர்ப்பொருளிய லின் அடிப்படை அம்சங்கள் என்றால் மிகையாகாது. மேற் கூறிய அனைத்து வகை செயற்பாடுகளும் கழிவு முகாமைத்துவத்தில் முக்கிய செயற்பாடுகளாகும். தினந்தோறும் உருவாகும் கழிவுகளை மீள் பயன்படுத்தலுக்கும் மீள்சுழற்சி செய்யவும் ஏற்ற வகையில் அவற்றிற்கான தொழில்நுட்பங்களை உட்புகுத்தும் வழிவகைகள் கண்டறியப் படல் வேண்டும்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...

மேலைத்தேயங்களில் அதீத தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக இவை சாத்தியமான நிலையில் எமது தேசத்திலும் புதிய கண்டு பிடிப்புக்கள் மூலமும் மேலை நாட்டு தொழில்நுட்பங்களை இங்கு அறிமுகமாக் குவதன் மூலமும் இதனை சாத்தியப் படுத்தலாம். இங்கே உருவாகும் சேதனக் கழிவுகளை முறையாக மீள் சுழற்சி செய்து இடு பொருட்களாக ஏனைய தொழிற்றுறைக்கான வாய்ப்பை வழங்கலாம். உற்பத்திப் பொருட்களை முழுவதுமாக கழிவுகள் என்று ஒதுக்கி வைத்திருக்காது அவற்றினை மீளப் பயன்படுத்தும் வாய்ப்புக்களை உயிர்ப்பொருளியலினூடாக உருவாக்கலாம். இதற்காக பலவகை நன்மைதரும் நுண்ணங்கிகளை பிற நாடுகளில் பயன்படுத்துகின் றார்கள். இவை சார்ந்த அறிவினை எமது மக்களுக்கு வழங்குவதும் இதனது செயற்பாட்டிலொன்றாகும். இத்தகைய செயன்முறைகள் சூழலை மாசுபடுத்தும் காரணிகளை, பொருட்களை இலகுவாக அகற்றவும் சுகாதாரத்தை மேம்படுத்தவும் உதவும். இவற்றுடன் எமதுதேசத்து உயிர்ப்பல்வகைமையை பேணிப் பாதுகாக்கவும் ஏதுவாகும்.

உயிர்ப்பெருளியலின் விளைவாக வேலை வாய்ப்பு அதிகரிக்கவும் குறிப்பாக உயிர்ப்பொருட்கள் சார்ந்த தொழிற்றுறை வளர்ச்சியடையவும் அதன் மூலமாக உணவுற்பத்தி ஊட்டச்சத்து குறைபாடு நிவர்த்தி மேலும் எமது அன்றாட வாழ்க்கைக்கு தேவையான பல்வகை உணவு மற்றும் சமநிலையான உணவைப் பெறவும் வாய்ப்புக்களதிகம். உல்க மயமாக்கலில் உயிர்ப் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்புண்டு. எமது தேசத்து உயிர்வளங்களை வினைத்திறனாக பயன்படுத்தும் தொழில்வாய்ப்புக்களை நாம் ஏற்படுத்திக்கொள்ளலாம்.

இவற்றிலொன்று உயிர்க் காரணிகள் என இனங் காணப்பட்ட பயிர்களிலுள்ள பீடைகள் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்தும் இயற்கையாக காணப்படும் இரை கௌவிகள், ஒட்டுண்ணிகள். முற்றும் பீடைகளில் நோய்களைக் கட்டுப் படுத்தும் உயிர்க் காரணி களாக நுண்ணங்கிகள். இவை தவிர உயிரியல் காரணிகளாக பல வகையான நன்மை தரும் நுண்ணங்கிகள், விலங்குகள் மற்றும் தாவரங்களும் இருக்கின்றன. நன்மை தரும் நுண்ணங்கிகளில் தாவரத்திற்கு தேவையான ஊட்டச்சத்தை நிலத்தில் பதிக்கும் நுண்ணங்கிகள், ஒன்றிய வாழ்க்கை வாழ்ந்து தாவரத்தின் வளர்ச்சிக்கும் உற்பத்திக்கும் உதவும் நுண்ணங்கிகள் என்பனவற்றையும் இதில் சேர்த்துக் கொள்ளலாம். இவை தவிர நுண்ணங்கிகள் தொழிற்றுறையில் தற்போது ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்து விட்டன. குறிப்பாக உணவு உற்பத்தி தொழிலில் பலவகையான நுண்ணங்கிகள் சிறப்பாக பயன்படுத்தப்படுகின்றன. உணவிலிருந்து பெறுமதிசேர் பொருட்களாக உற்பத்திசெய்வதற்கும் குறிப்பாக சந்தை வாய்ப்பை எதிர்நோக்கி விதம்விதமான வெவ்வேறு சுவையான, தரமான உணவுப் பொருட்களின் உற்பத்தியில் உயிர்ப் பெர்ருளாதாரம் முக்கிய பங்களிக்கின்றது.

காபனை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு புதிய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் முயற்சிக்கும் அதே வேளையில் வளிமண்டலத்தில் பச்சை வீட்டுவாயுக்களின் வெளியிடுதலைக் குறைத்து அவற்றை மீள்சுழற்சி செய்து பயன்படுத்தும் தொழில் நுட்பங்கள் உருவாக் கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. உயிர்ப் பொருளியல் உணவுற்பத்தியில் கரிசனை காட்டுவது போல ஏனைய தொழிற்றுறைகளான உடைகள் தயாரித்தல், வேளாண்மை, நீருடக வளர்ப்பு, மீன்பிடியியல் மற்றும் கால் நடையுற்பத்தி என்பனவற்றில் அதிகளவு பயன்பாட்டில் உள்ளடங்கலாம்.

உயிர்த் தொழில் நுட்பம் மூலமாக உயிர்க்கரி, உயிர் எரிபொருள், உயிர்வாயு என்பனவும் இவற்றை விட மருந்துற்பத்தி, பீடை நாசினிகளுக்கெதிரான உயிர் காரணிகளைப் பயன் படுத்தும் உயிரியல் கட்டுப்பாடு மற்றும் உயிரியல் பீடை முகாமைத்துவம் என்பனவும் முக்கியத்துவம் பெறுகின்றன. மண்ணிலுள்ள நன்மைதரும் நுண்ணங்கிகள் இவற்றுடன் ஏனைய நன்மை தரும் உயிரிகளுடன் எமது விவசாயத்தை வென்றெடுக்கவும் காலநிலை மாற்றம் மற்றும் இயற்கை பேரிடர்கள் என்பனவற்றிலிருந்து விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி போன்ற துறைகளை காப்பாற்றவும் பொருத்தமான தொழில்நுட்பங்களை பயனபடுத்த வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும்.

உயிரியல் கட்டுப்பாட்டுக்கான செயலூக்கம் எமது தேசத்தில் இன்னமும் முனைப்புக் காட்டவில்லை. அதனால் இன்னும் நாம் செயற்கை பசளைகளிலும் செயற்கை பீடை நாசினிகளிலும் தங்கியிருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை. சேதன விவசாயத்தை மேம்படுத்துவதற்கு உயிர்க் காரணிகளின் கிடைக்கும் தன்மை மிகமிக முக்கியமானது. மாற்று வழிகளின்றி பொருட்களின்றி அசேதன இரசாயனத்தை திடுதிப்பென அகற்றிவிட முடியாது. அதில் வந்த எதிர்ப்பினையும் நம்மவர்கள் கற்றறிந்து மட்டுமல்ல பட்டறிந்தார்கள். எந்த விடயத்தை இல்லா தொழிப்பதாயினும் மாற்று முறைகளை முறையாக பரிந்துரைக்காது திடுதிப்பென மாற்றி மக்களை அல்லல் பட வைக்க முடியாது. சேதன விவசாயம் உயிர்ப் பொருளாதாரத்தில் முழுமையாக தங்கியிருக்கின்றது. மெல்ல மெல்ல சேதன விவசாயத்திற்குள் காலடியெடுத்து வைத்த பின் தேவையான உள்ளீடுகளை நிச்சயமாக்கிக் கொண்டு அசேதன இரசாயனத்தை அகற்றும் வழிமுறைக்குள் வரலாம்.

ஆக மொத்தத்தில் எங்களிடமுள்ள நுண்ணுயிர்கள், உயிரியல் பல்வகைமையில் உள்ள நன்மை தருகின்ற யிரிணங்கள் என்பனவற்றை ஆய்வுக்குட்படுத்தி சிறந்தவைகளை மீள பயன்படுத்த எத்தனித்தலே உயிர்ப்பொருளியலில் நாம் உள்வாங்கப்பட்டதற்கான சான்றுகளாகும். இவை தவிர எமக்குள்ள தாவரங்கள் குறிப்பாக மருத்துவக் குணமுள்ள மூலிகைகள், அவற்றிற்கும் எமது உணவு, உடை, நாம் வாழ்வதற்கான வீடு இவை தவிர எமக்கு தேவையான குறித்த வகை உற்பத்திகள் என்பன உயிர்ப் பெருளாதாரத்தினூடாக பெற வழியுண்டு என்பதுடன் இதனை முதன்மையாகக் கொண்டு எமது வளத்தையும் பெருக்கி எமது கைகளில் தங்கியிருக்கும் பொருளாதாரத்தை முன்நகர்த்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான வீடுகள் வழங்க ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

குறைந்த வருமானம் பெறுபவர்கள், படைப்பாற்றல் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு 1,996 வீடுகள் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் சீன அரசின் உதவியுடன் கைச்சாத்தானது.

இலங்கை அரசாங்கத்தின் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும், சீன அரசாங்கத்தின் சார்பாக இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் ஷென்ஹோங்வும் இந்த ஒப்பந்தத்தில் நேற்று முன் தினம் கைச்சாத்திட்டனர்.

மூன்றாண்டுகளில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த வீடுகளில் 1,888 வீடுகள் கொழும்பில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கும், 108 வீடுகள் உள்நாட்டின் படைப்பாற்றல் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கும் ஒதுக்கப்படவுள்ளன.

இந்த திட்டத்திற்காக சீன அரசாங்கம் 24.48 பில்லியன் ரூபாய் நிதியுதவி வழங்கவுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். (5-6)



# உள்ளூராட்சி தேர்தலை நடத்த நடவடிக்கை எடுங்கள்

## பெப்ரல் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

மக்களின் இறையாண்மையைப் பாதுகாக்கும் வகையில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு பணத்தை விடுவித்து, திட்டமிட்டபடி உள்ளூராட்சி மன்றத்தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்குமாறு பெப்ரல் அமைப்பு கோரியுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கு பெப்ரல் அமைப்பு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துத்வதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவால் கோரப்பட்ட 10 பில்லியன் ரூபாவில் ஏற்கனவே ஒரு பில்லியன் ரூபாய் தேர்தல் நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டுள்ளதாக குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 400 | 340 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 800 | 700 | 700 | 800 |
| தக்காளி | 400 | 500 | 500 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 150 | 150 |
| கோவா | 400 | 350 | 350 | 500 |
| கரட் | 350 | 400 | 400 | 500 |
| பூசணி | 120 | 100 | 100 | 120 |
| புடோல் | 250 | 250 | 200 | 250 |
| வாழைக்காய் | 200 | 200 | 180 | 300 |
| சின்ன வெங்காயம் | 400 | 380 | 400 | 500 |
| பெரிய வெங்காயம் | 300 | 240 | 280 | 350 |
| பாகற்காய் | 650 | 500 | 500 | 600 |
| வெண்டக்காய் | 250 | 200 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 200 |
| பயற்றங்காய் | 800 | 650 | 600 | 600 |
| லீக்ஸ் | 400 | 280 | 300 | 400 |
| பீற்றூட் | 350 | 300 | 300 | 500 |
| கறிமிளகாய் | 800 | 900 | 800 | 800 |
| முருங்கைக்காய் | 700 | 850 | 600 | 800 |
| போஞ்சி | 650 | 700 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 350 | 250 | 350 | 380 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 150 | 200 |
| தேசிக்காய் | 1500 | 1000 | 1200 | 1000 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 450 | 500 | 500 |
| வெங்காயப்பூ | — | — | - | — |
| முள்ளங்கி | 120 | 200 | - | 300 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 200 | 50 | 60 |
| ஈரப்பலா | 200 | 200 | 120 | 250 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2976

அபிநயா




கலைவாணி




தீபன்




ராஜி




சங்கவி




சாந்தன்







நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 340





வாழ்க்கை என்பது இடைவிடாத ஓர் ஆனந்த உற்சவமாக இருந்து வந்தது. அன்பும் ஆதரவும் ஆடலும் பாடலும் காவியமும் ஓவியமும் அணிமணியும் அலங்காரமும் உத்தியானவனமும் ஒய்யார ஓடமுமே வாழ்க்கை என்று எண்ணும் படியாக நாட்கள் சென்று கொண்டிருந்தன. தந்தையும் தாய்மார்களும் அண்ணனும் தம்பியும் அமைச்சர்களும் ஆசிரியர்களும் தாதிமார்களும் தோழிமார்களும் இளையபிராட்டியைத் தங்கள் கண்ணின் கருமணியாகப் பாவித்து நடத்தி வந்தார்கள். துயரம் இன்னது என்பது காவியத்திலும் நாடகத்திலும் உள்ள கற்பனை மூலமாகவே அவளுக்குத் தெரிந்திருந்தது.

அத்தகைய பாக்கியசாலிக்குத் துன்பம் வரத் தொடங்கிய போது ஒன்றன் மேலொன்றாகத் தொடர்ந்து வந்து மோதியது. தந்தையின் நிலை கவலைக்கிடமாயிருந்தது. இராஜ்யத்துக்குப் பெரிய சோதனை ஏற்பட்டிருந்தது. தமையனும் தம்பியும் தூர தேசங்களில் இருந்தார்கள். இன்னதென்று சொல்ல முடியாத ஒரு பெரும் விபத்து சோழர் குலத்துக்கு ஏற்படப் போவதாக சோதிடர்களும் நிமித்தக்காரர்களும் மர்மமாகச் சொல்லி வந்தார்கள். நாட்டில் இரகசியச் சதிக் கூட்டங்கள் நடந்து வந்தன. நாட்டின் மக்கள் இனந்தெரியாத பீதியில் ஆழ்ந்திருந்தார்கள்.

வைர நெஞ்சு படைத்த வீரர்கள் வழி வழியாக வந்த குலத்தில் பிறந்த குந்தவை இவ்வளவையும் வீரத்துடன் சமாளிக்கக் கூடிய மனோதைரியம் பெற்றிருந்தாள். குலத்துக்கும் இராஜ்யத்துக்கும் ஏற்பட்டிருந்த எல்லா அபாயங்களையும் தன் கூரிய மதியின் துணையினால் போக்கிவிடலாம் என்ற திடமான நம்பிக்கை அவளுக்கு இருந்தது. ஆனால் அவளுடைய வாழ்க்கையில் ஒரு சிறிய சம்பவம். எதிர்பாராத ஒரு சந்திப்பு, அவளுடைய வைர இதயம் இளகவும் மனோதைரியம் குலையவும் காரணமாகி விட்டது. வந்தியத்தேவனை குந்தவை சந்தித்த போது, அதுவரையில் மொட்டாக இருந்த அவளுடைய இருதய தாமரை, மடலவிழ்ந்து மலர்ந்தது.

ஆனால், என்ன துரதிருஷ்டம் அதே சமயத்தில் ஒரு கருவண்டு அந்த மலருக்குள் குடிபுகுந்து, தன் விஷக் கொடுக்கினால் அதன் மெல்லிய இதழ்களைக் கொட்டத் தொடங்கியது. அம்மம்மா! என்ன வேதனை! அந்த வாணர் குல வீரன் ஒரு வேளை சிறைப்பட்டிருக்கலாம் என்ற எண்ணம் எவ்வளவு வேதனையை அளித்தது? அவன் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற கொடிய வார்த்தை எப்படி அவள் நெஞ்சைப் பிளந்தது? அதை வெளிக்காட்டிக் கொள்ளாமலிருக்க அவள் எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருந்தது? பெற்றவர்கள், உற்றார்கள், உடன்பிறந்தவர்கள், உயிருக்குயிரான தோழிகள் எவ்வளவோ பேர் இருக்க, எவனோ வழியோடு போகிறவனைப் பற்றி, அகஸ்மாத்தாக இரண்டு மூன்று தடவை சந்தித்தவனைப் பற்றி ஏன் இந்த இருதயம் இப்படித் துடிதுடிக்க வேண்டும்? இதையெல்லாவற்றையும் யோசிப்பதற்கும் காரண காரியங்களை ஆராய்ந்து முடிவு கட்டுவதற்கும் இப்போது நேரமில்லை. மீன மேஷம் பாராமல், சகுனமும் சகுனத்தடையும் பாராமல் விசாரிக்க வேண்டியதை உடனே விசாரித்து, செய்ய வேண்டியதை உடனே செய்ய வேண்டும்.

ஆகவே அன்று பிற்பகலிலேயே இளையபிராட்டி சின்னப் பழுவேட்டரையரின் மாளிகைக்கு வருவதாகச் சொல்லி அனுப்பிவிட்டுச் சென்றாள். அந்த மாளிகையின் அந்தப்புர மாதர்கள் இளைய பிராட்டியை ஆர்வத்தோடு வரவேற்றார்கள். அன்பைச் சொரிந்து உபசரித்தார்கள். இளவரசி அவர்களுடன் அளவளாவிச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த பிறகு சித்திர மண்டபத்துக்குச் சென்றாள். அங்கே சின்னப் பழுவேட்டரையர் காத்திருந்து இளைய பிராட்டியை வரவேற்று, மண்டபத்தில் தீட்டியிருந்த சித்திரங்களை விளக்கிக் கூற முற்பட்டார்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



## கிணற்றுக்குள் வைர மோதிரம்



அந்த ஆண்டுக் கோடைக்காலம் மிகக் கடுமையாக இருந்தது. ஆறு, குளங்கள், கிணறுகள் வற்றிப் போயின. செடி, கொடிகள் வாடி வதங்கின. நண்பகலில் தெருக்கள் வெறிச்சோடிப் போயின. வெயிலுக்கு பயந்து மக்கள் தங்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தனர்.

ஒரு நாள் அதிகாலையில், சக்கரவர்த்தி அக்பர், சில அதிகாரிகள் புடைசூழ வெளியே உலாவக் கிளம்பினார். பீர்பலும் அவர் கூடவே சென்றார். அக்பர் கோடையின் கொடுமையைப் பற்றி பேசிக் கொண்டே வந்தார். அவர்கள் செல்லும் வழியில் ஒரு கிணறு தென்பட்டது. அதைப் பார்த்த அக்பர், "தலைநகரில் உள்ள கிணறுகள் யாவும் வற்றி விட்டன என்று கேள்விப்பட்டேன். இந்தக் கிணற்றில் தண்ணீர் இருக்கிறதா பார்ப்போம்" என்று சொல்லிக் கொண்டே அதன் அருகில் சென்று குனிந்து பார்த்தார்.

"இது மிகவும் ஆழமான கிணறு. அடியில் தண்ணீர் இருக்கிறதா, இல்லையா என்றே தெரியவில்லை" என்று அக்பர் கூறவும் அதைக் கேட்ட பீர்பால், "பிரபு! தண்ணீர் இருக்கிறதா என்று அறிய ஒரு கல்லைத் தூக்கிப் போட்டால் தெரிந்து விடுமே. தண்ணீர் இருந்தால் கல்பட்டு தெளிக்கும்," என்று சொல்லிவிட்டு, கிணற்றினுள் ஒரு கல்லை எறிந்தார். கல் அடியில் சென்று விழுந்த ஒலியைக் கேட்டதுமே கிணறு முற்றிலும் வற்றியுள்ளது என்று தெரிந்தது.

"பீர்பால்! கிணற்றினுள் ஒற்றைக் கல்லாகப் போடக் கூடாதென்று சொல்லுவார்கள். அதனால் இன்னொரு கல்லை நான் போடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே, தன் விரலில் இருந்த ஒரு வைர மோதிரத்தை அக்பர் கிணற்றினுள் போட, சுற்றியிருந்த அனைவரும் திகைத்துப் போயினர்.

"பிரபு! வைரமோதிரத்தை ஏன் போட்டீர்கள்?" என்று பீர்பால் கேட்க, "வைரமும் ஒரு கல்தானே. அதனால் தான் போட்டேன்" என்றார் அக்பர். "ஆயினும் கல்லெல்லாம் வைரக்கல்லாகுமா? நீங்கள் செய்தது சரியா?" என்று பீர்பால் கேட்டார்.

"அதனால் என்ன, பீர்பால். யாரையாவது கிணற்றில் இறங்கச் சொல்லி மோதிரத்தை எடுத்து விட்டால் போகிறது." என்ற அக்பர் தொடர்ந்து "கிணற்றுள் இறங்கினால் யார் வேண்டுமானாலும் மோதிரத்தை எடுத்து விடலாம். ஆனால் யாராவது கிணற்றுக்குள் இறங்காமலே அந்த மோதிரத்தை எடுக்க முடியுமா?" என்று கேட்டார்.

"முடியவே முடியாது, பிரபு" என்றார் கூட இருந்த பிரமுகர் ஒருவர். "முடியாதது என்று ஒரு காரியமும் இல்லை. முயன்று பாருங்களேன்" என்று அக்பர் சொல்ல, "பிரபு! அது யாராலும் செய்ய முடியாத காரியம்" என்றார் அதே பிரமுகர். மற்றவர்களும் அதை ஆமோதித்தனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் எப்போதுமே மண்டியிடுவது இல்லை.

– அப்துல் கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கையில் தலைவர்களுக்கும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது

இலங்கையில் பொருளாதாரம் மட்டுமல்ல அரசியலும் பஞ்சப்பட்டுக் கிடக்கிறது.

ஆம், 2024ஆம் ஆண்டு இந்த நாட்டில் இரண்டு தேர்தல்கள் இடம்பெறும். அதில் ஒன்று ஜனாதிபதித் தேர்தல். மற்றையது பொதுத் தேர்தல் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் வைத்துக் கூறியுள்ளார்.

தேர்தல்களை நடத்துவது மிகப்பெரும் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்துமாயினும் தேர்தலை நடத்தாமல் எதுவும் செய்ய முடியாதென்ற நிலையில் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களை நடத்தியே ஆக வேண்டும்.

பொதுத் தேர்தல் என்றால் பரவாயில்லை. அது ஒரு கூட்டு முயற்சி. பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக் கொள்பவர்கள் ஆட்சி அமைப்பர். அவர்கள் யாரைப் பிரதமராக நியமிக்கிறாரோ அவர் அந்தப் பதவியை அலங்கரிப்பார்.

ஆனால் ஜனாதிபதித் தேர்தல் அப்படியானதல்ல. ஜனாதிபதித் தேர்தலில் தனிநபர் போட்டி இடம்பெறும்.

அதாவது தனிநபர்களாகப் போட்டியிட்டு அதில் ஒருவர் வெற்றி பெற வேண்டும்.

அவ்வாறாயின் வெற்றி பெறுகின்றவர் மக்களின் செல்வாக்கைப் பெற்றவராக – நேர்மையானவராக – இந்த நாட்டை நிர்வகிக்கின்ற ஆளுமைமிக்கவராக இருக்க வேண்டும்.

அவ்வாறான ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் மட்டுமே அவரை மக்கள் ஆதரிப்பர்.

ஆனால் இலங்கையில் அத்தகைய ஒருவரைத் தேடி எடுப்பதென்பது முடியாத காரியமாக உள்ளது.

முன்பெல்லாம் ஜனாதிபதித் தேர்தல் என்றதும் அடுத்த ஜனாதிபதி இவராகவே இருப்பார் என்ற ஊகங்கள் எழத்தொடங்கும். இது ஒருவரை மட்டும் சுட்டி நிற்காது.

மாறாக ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் அவ்வாறான கருத்துக் கணிப்புக்குள் அடங்குவர்.

ஆனால் இன்றைய நிலைமை அதுவன்று. மாறாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக நிற்பதற்கு யார் உளர். அவர் கேட்டால் படுதோல்வியடைவார், இவர் கேட்டால் மண் கௌவுவார் என்ற நிலைமையே காணப்படுகிறது.

ஆக, இலங்கை அரசியலில் இந்த நாட்டை ஆளக்கூடிய ஆளுமை எவரிடமும் இல்லை என்ற அளவுக்கு நிலைமை வந்து விட்டது.

இவ்வாறான நிலைமை எப்போது ஏற்படும் என்றால், அந்த நாடு வறுமைக்குள், பொருளாதார மந்தத்துக்குள், மதவெறிக்குள், இனவாதத்துக்குள் வீழ்கின்றபோதே ஏற்படுவதாகும்.

ஆக, நாட்டை ஆளக்கூடிய தலைவன் இல்லை என்ற கையறுநிலை வந்துவிட்டதெனில், இலங்கை இனி பஞ்சப்பட்ட நாடு என்ற வரிசையில் இருந்து இப்போதைக்கு மீளமுடியாதென்ற நிலை வந்துற்றதென்பதே பொருளாகும்.

இதுதவிர, இவ்வாறான நாட்டில் ஊழல் தலைவிரித்தாடும். அதிலும் ஊழலைத் தடுக்க வேண்டிய தரப்பே அதனை மும்முரமாகச் செய்யும்.

அரச அலுவலகங்களில் பணிகள் மந்தமடையும். ஏமாற்றுவித்தைகள் பல்கிப் பெருகும்.

களவு, கொள்ளை, கொலை, வாகன விபத்துக்கள் கண்டபாட்டில் அதிகரிக்கும்.

இவைதான் இனி இலங்கையின் இயல்புகளாம்.

# தேர்தல் மறுசீரமைப்புக்கு எதிர்க்கட்சிகள் இணங்கினால் தேர்தல் நடத்த தயார்

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன

தேர்தல் முறை மறுசீரமைப்புக்கு எதிர்க்கட்சிகள் இணக்கம் தெரிவித்தால், தாமதமாகிவரும் மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் தயாராக இருப்பதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

மாகாண சபைத் தேர்தல்நடத்தப்படும் முறைமை தொடர்பில் எதிர்க்கட்சி எம்.பிக்கள் வித்தியாசமான யோசனைகளை முன் வைக்கின்றனர். மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் முறைமைக்கு அவர்கள் இணக்கம் தெரிவித்தால் நாம் தேர்தலை நடத்த முடியும்.

மாகாண சபைத் தேர்தல்கள் பழைய முறையிலும் மற்றவை புதிய முறையிலும் நடத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் கூறுகின்றனர். ஆனால், மாகாண சபைத் தேர்தல் தொடர்பான தெரிவுக்குழுவில் எந்தவொரு கட்சியும் இணக்கப்பாட்டுக்கு வரவில்லை.

மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கோருபவர்களே, தேர்தலை நடத்துவதை முட்டுக்கட்டைக்குள் தள்ளும் மாகாண சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் திருத்தத்தையும் அங்கீகரித்தவர்கள் என்றார்.

இதேவேளை, மாகாண சபைத் தேர்தலை பழைய முறையில் நடாத்துவதற்கு தமது கட்சி முயற்சிப்பதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல பிரதமருக்கு பதிலளித்ததுடன் மாகாண சபைத் தேர்தலை பழைய முறையிலேயே நடத்துவதற்கு திருத்தம் கொண்டு வரப்பட்டால் அதற்கு ஆதரவளிப்போம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

(ம-7)

# நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்திலேயே நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்திலேயே நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமான வீழ்ச்சியை சந்தித்திருந்ததாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் தொடர்பில் காரசாரமான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. மத்திய வங்கியின் அறிக்கைகளின் படி, நான் ஜனாதிபதியாக பதவி வகித்த ஒன்பது வருட காலப்பகுதியில் 2006 முதல் 2009 வரையிலான நான்கு வருட யுத்தத்தின் போது இலங்கையின் சராசரி வருடாந்த பொருளாதார வளர்ச்சி 6 வீதமாக இருந்தது.

2010 முதல் 2014 வரையிலான போருக்குப் பிந்தைய ஐந்து ஆண்டுகளில், இது 6.8% ஆக அதிகரித்துள்ளது. இந்த தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சியின் காரணமாக, இலங்கையின் தனிநபர் மொத்த உள்நாட்டு வருமானம் 2005 ஆம் ஆண்டின் இறுதியில் 1,242 அமெரிக்க டொலர்களில் இருந்து 2014 ஆம் ஆண்டின் இறுதியில் 3,819 அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது. இது மூன்று மடங்கு அதிகரிப்பாகும்.

1948 முதல் 2005 வரை இலங்கையை ஆட்சி செய்த அனைத்து அரசாங்கங்களின் பங்களிப்பையும் விட இந்த நாட்டின் தனிநபர் மொத்த உள்நாட்டு வருமானத்தை அதிகரித்ததில் எனது அரசாங்கத்தின் பங்களிப்பு இரண்டு மடங்கு அதிகம்.

கோவிட்-19 தொற்று நோயால் ஏற்பட்ட பொருளாதாரச் சுருக்கம் காரணமாக, 2022 ஆம் ஆண்டில் இலங்கையின் தனிநபர் மொத்த உள்நாட்டு வருமானம் 3,474 ஆகக் குறைந்தது.

2005 ஆம் ஆண்டின் இறுதியில் ஆண்டின் வருமானத்தில் 90 வீத அரச வருமானம் இலங்கையின் கடனை செலுத்தவே செலவிடப்பட்டது. ஆனால், 2014 ஆம் ஆண்டின் இறுதியில் 69 வீதமே கடன் செலுத்த தேவைப்பட்டது.

2005 ஆம் ஆண்டின் இறுதியில் 1,922 ஆக இருந்த அனைத்து பங்கு விலைக் குறியீடும் 2014 ஆம் ஆண்டின் இறுதியில் 7,299 ஆக உயர்ந்துள்ளது.

புலிகளுடனான போர், 2007 இல் உலகளாவிய உணவு நெருக்கடி மற்றும் 2008-2009 உலக நிதி நெருக்கடி ஆகியவற்றின் மத்தியிலேயே பொருளாதார வளர்ச்சியை அடைய முடிந்தது.

இந்த காலக்கட்டத்தில் கச்சா எண்ணெய் விலை வரலாற்றில் இல்லாத அளவுக்கு உயர்ந்திருந்தது.

2015 மற்றும் 2019 க்கு இடையில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிக்கு வெளிப்புற காரணங்கள் எதுவும் இல்லை. இந்த காலகட்டத்தில் நமது அண்டை நாடுகள் அனைத்தும் தீவிரமான பொருளாதார வளர்ச்சியை அடைந்திருந்தன.

அதே காலகட்டத்தில், இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் சராசரி பொருளாதார வளர்ச்சி 7 வீதத்துக்கும் அதிகமாகக் காட்டியது. மாலைதீவின் சராசரி பொருளாதார வளர்ச்சி விகிதம் 6 வீதமாக இருந்தது. ஆனால், இலங்கையின் சராசரி பொருளாதார வளர்ச்சி 3.5 வீதமாக இருந்தது.

இது 2021 இல் பதிவு செய்யப்பட்ட வளர்ச்சி விகிதத்தைப் போன்றது. 2021 ஆம் ஆண்டு கோவிட் தொற்றுநோய் உச்சம் தொட்ட ஆண்டாகும்.

2015 மற்றும் 2019 க்கு இடையில், சர்வதேச இறையாண்மைப் பத்திரங்கள் மூலம் தாங்க முடியாத அளவு வெளிநாட்டு வர்த்தகக் கடன் திரட்டப்பட்டமை, அந்தக் காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட மிக மோசமான பாதிப்பாகும் என்றார்.

(ம-7)

**வடமாகாண மரநடுகை மாதம்**

**கார்த்திகை - 2023**

**“மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடிகொள்ளச் செய்யும் ஒன்றாகும்.”**

*- ஸ்டேர்லிங் மோர்ட்டன்*
*(அமெரிக்க அரசியலாளர்)*

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2023
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

JSAC

16 2023

“அனைத்து வேலைத்தளங்களிலும் பெண்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுப்பதும், இல்லாதொழிப்பதும் நம் எல்லோருடைய கடமையும் பொறுப்புமாகும்.”

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலும் புதிய ஊழல் தடுப்புச் சட்டமும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

02

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



உள்வியாபாரம்- தமது பதவியின் நடவடிக்கைகளோடும் கடமைகளோடும் மற்றும் பொறுப்புக்களோடு பொருத்தமில்லாத வகையில் வியாபார ரீதியான இலாபங்களை ஈட்டும் வகையில் அல்லது கொடுக்கல் -வாங்கல்களில் ஈடுபட்டு தனிநபர் சொத்துக்களைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

**அனுசரணை வழங்கல்:-** ஒரு நபரின் சேவை அல்லது வளங்களை குடும்பம். கட்சிகள். தேசிய இனங்கள், மதங்கள், சாதிகள், பால்நிலை அல்லது விருப்பத்தின் அடிப்படையில் வழங்கல்.

**உறவினர்களுக்கான சலுகைகள்:-** பொது/அரச நிறுவனங்களுக்கு நியமனங்கள் செய்கையில் அரச நிவாரணங்கள் வழங்குகையில் உறவு /நட்பு காரணமாக மேற்படி நியமனங்களை, நிவாரணங்களை வழங்குதல்.

**சட்ட விரோதமான கொடைகள்:-** அதிகாரத்திலுள்ள அரசியல் கட்சிக்கு அல்லது அரசாங்கத்திற்கு சிற்சில தீர்மானங்களை மேற்கொள்ளும் போது இடையீடு செய்யாமல் இருப்பதற்கு அல்லது அதிகாரத்திற்கு வரவிருக்கும் அரசியல் கட்சிகளுக்கு அரசியல்வாதிகள் அதிகாரத்திற்கு வந்த பின்னர் வழங்கக்கூடிய இலாபங்களுக்குக் கிடைக்கும் நிதி மற்றும் கொடைகள்.

**பாலியல் லஞ்சம்:** பாலியல் லஞ்சம் என்பது ஒருவர் தான் பெறவேண்டிய சேவைக்காக அரச துறை, நீதித்துறை, தனியார் துறை அல்லது காவல் துறை செல்லும் போது அவருக்குத் தேவையான சேவைக்கு ஈடாக பாலியல் உதவி ஞ்செய்ய வேண்டும் என்று கேட்பதாகும். இன்று வேலை கிடைப்பது கடினம். பெண்களுக்கு வேலை கிடைப்பது இன்னும் கடினம். ஆரம்பத்தில் தெரியாத ஒரு கலைச் சொல்லாக இருந்தது. பெண்கள் பொதுச் சேவைகளை பெற முயலும் போது பொதுத்துறை அதிகாரிகளிடம் இருந்து பாலியல் உதவிக்கான கோரிக்கைகளை எதிர்கொள்வதை அறியக் கிடைத்த பின்னரே இச்சொல் பாவனையில் வந்தது.

நீங்கள் ஒருநாள் என்னுடன் வாருங்கள் பிறகு நான் உங்களுக்கு பரிந்துரை செய்து கடிதம் தருகிறேன் என்று கூறுவதும் உங்களைப் பார்க்க நான் மிகவும் ஆவலாக உள்ளேன். உனக்கு வேலை வேண்டுமானால் கணவனுக்குத் தெரியாமல் என்னுடன் உடலுறவு கொள்ள வேண்டும் என்று கூறுவதும் நீ என் வைப்பாட்டி போல இருந்தால் நான் உங்களுக்கு பதவி உயர்வு தர முடியும் என்று கூறுவதும் பாலியல் லஞ்சத்திற்குள் அடங்கும்.

பல்வேறு நிறுவனங்களில் பணிபுரியும், வேலை தேடும் மற்றும் பல்கலைக்கழகத்தில் படிக்கும் பெண்களுக்கு "உயர் இருக்கைகளில்" உள்ள நபர்கள் குறுஞ்செய்திகள் அனுப்பி பாலியல் இலஞ்சம் கேட்கிறார்கள்.

பல்கலைக்கழக உயர்கல்வி அல்லது வேலைக்கான சிபாரிசு கடிதம் பெறுவது, நிறுவனத்தில் பதவி உயர்வு, சம்பள உயர்வு என பல பெண்கள் தங்கள் உயர் அதிகாரிகளால், முதலாளிகளால் பாலியல் லஞ்சம் கொடுக்க அழுத்தம் கொடுத்த அனுபவங்கள் பல பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள்.

### சென்ற டிசெம்பர் மாதம் வந்த ஒரு செய்தி

சென்ற டிசெம்பர் மாதம் அரச செய்தியில் பின்வரும் செய்தி வந்திருந்தது. விமானப் பணிப்பெண் ஆட்சேர்ப்பு நிறுவனம் என்ற போர்வையில், இணையவழியூடாக நேர்முகப் பரீட்சை நடாத்தி, அழகான பெண்களின் நிர்வாணப் புகைப் படங்களை பெற்றுக்கொண்டு பாலியல் இலஞ்சம் பெற முயன்ற ஒருவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் ஹங்குரன்கெத்த பிரதேசத்தைச் சேர்ந்த, நீர்ப்பாசன வடிகாலமைப்பு சபையில் பணி புரிகின்ற ஒருவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குற்றப்பபுலனாய்வுத் திணைக்களத்தின் கணனி மோசடி விசாரணைப் பிரிவின் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லகீரன்தெணியவிடம் சம்பவத்திற்குள்ளான மாத்தளை மற்றும் கண்டி பிரதேசங்களைச் சேர்ந்த இரு யுவதிகள் முறைப்பாடு செய்துள்ளனர். இதற்கமைய மேற்கொண்ட விசாரணையின் போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபருடன், இந்த மோசடிக்கு பயன்படுத்திய நான்கு கையடக்கத் தொலைபேசிகள், 13 சிம் அட்டைகள் மற்றும் ஒரு கணனியும் கண்டி, கணனி மோசடி விசாரணைப் பிரிவின் நிலைய அதிகாரி, பொலிஸ் பரிசோதகர் சதுரி திஸாநாயக்க உள்ளிட்ட குழுவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கணனியில் இருபதுக்கும் மேற்பட்ட இளம் பெண்களின் நிர்வாணப் புகைப்படங்கள் காணப்பட்டுள்ளன.

குறித்த சந்தேகநபர், பெண் ஒருவர் போல் நடித்து, "பெண்களின் பிரச்சினைகள்" என்ற பெயரில் சுமார் இரண்டு வருடங்களாக முகப்புத்தப் பக்கம் ஒன்றின் ஊடாக, இளம் பெண்களுக்கான அழகு தொடர்பான ஆலோசனைகள், தொழில்வாய்ப்புக்கள் மற்றும் நடிப்பதற்கான வாய்ப்புக்கள் வழங்கும் குழுக்களின் தொடர்பை ஏற்படுத்தித் தருவதாகவும் கூறியுள்ளார்.

இதற்கிடையில், விமானப் பணிப் பெண் ஆட்சேர்ப்புஎன்று குறிப்பிட்டு கூறி குறித்த முகப்புத்தகக் கணக்கில் இளம் பெண் ஒருவரின், பெயர் மற்றும் தொலைபேசி இலக்கத்தையும் பதிவிட்டுள்ளார். அத்துடன், தகைமைகளை பரிசீலிப்பதற்கு நிறுவனத் தலைவரைத் தொடர்பு கொள்ளுமாறு வேறொரு தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு முகப்புத்தகத்தில் தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட்டுள்ளார். குறிப்பிடப்பட்டிருந்த தொலைபேசி இலக்கத்தின் ஊடாக குறுந்தகவல் அனுப்பப்பட்டுள்ளது.

இதன்படி, நிறுவன தலைவராக, சந்தேகநபரால், அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்துள்ளீர் என்று கூறி விரல்கள், நகங்கள், கால்கள், முடி மற்றும் முகம் ஆகியவற்றின் தனித்தனி புகைப்படங்களை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிறகு, இதுதொடர்பான அனைத்து விடயங்களும் குறுந்தகவல் மூலம் இடம்பெற்றுள்ளன.

இறுதியாக, உடலில் தழும்புகள் உள்ளதா என்று பார்ப்பதற்கும் உடலின் புகைப்படங்களைப் பார்ப்பதற்கும் தனது பெண் அதிகாரிக்கு நிர்வாண புகைப்படங்களை அனுப்புமாறும் இறுதியாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிவித்தலின் பின்னர் அநேகமான இளம் பெண்கள் விமானப் பணிப்பெண்ணாக வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் குறித்த பெண் அதிகாரியின் தொலைபேசி எண்ணுக்கு நிர்வாண புகைப் படங்களை அனுப்பியுள்ளதாகவும் விசாரணை யில் தெரியவந்துள்ளது.

அதன்பின்னர் அந்த புகைப்படங்களில் உள்ள இளம் பெண்களை பயமுறுத்தி பாலியல் இலஞ்சம் பெற முயற்சித்துள்ளார்.

மேலும், நேர்முகப்பரீட்சையை மேற்கொள்ளும் பெண் அதிகாரி போன்று நடித்து, இந்த அனைத்து மோசடிகளையும் செய்தவர் குறித்த சந்தேகநபர் என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேகநபர் சுமார் இரண்டு வருடங்களாக முகநூல் ஊடாக இளம் பெண்களை ஏமாற்றி வந்துள்ளார். இவனிடம் சிக்கியுள்ள யுவதிகளை தேடி மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 2018ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் அப்போதைய உயர் கல்வி அமைச்சர் தெரிவித்த கருத்து

இலங்கையின் தென்கிழக்கு பல்கலைக்கழகத்திலுள்ள சில விரிவுரையாளர்களுக்கு, அங்குள்ள மாணவிகள் பாலியல் லஞ்சம் கொடுக்காமல் சில பாடங்களில் தேர்ச்சி அடைய முடியாது என்று இலங்கையின் உயர்கல்வி அமைச்சர் தெரிவித்த கருத்து, அங்கு பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையின்உயர்கல்விஅமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ, நாடாளுமன்றில் உரையாற்றும் போது இந்த விடயத்தைக் கூறினார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்திலுள்ள மாணவிகளிடம் அங்குள்ள சில விரிவுரையாளர்கள் பாலியல் லஞ்சம் கேட்பதாகவும் அதனை வழங்காமல் சில பாடங்களில் தேர்ச்சி அடைய முடியாது என்றும் அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். இதன்போது, மாணவியொருவரிடம் பாலியல் லஞ்சம் கோரியதாகக் கூறப்படும் விரிவுரையாளர் ஒருவரின் பெயரையும் நாடாளுமன்றில் அமைச்சர் குறிப்பிட்டார்.

### ஊழலை ஒழிப்பதற்கு வழிமுறையொன்று உண்டா?

இலங்கை அரசாங்கம் ஊழல்களைத் தடுப்பதற்கும் அதன் வெளிப்படுதன்மையைப் பாதுகாப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

பல்வகை ஊழல்களைத் தடுப்பதற்காக பல்வேறு முறைமைகளைக் கொண்ட நிறுவனங்களையும் சட்டங்களையும் உருவாக்கியுள்ளது. அவையாவன,

- கணக்காய்வாளர் நாயகத் திணைக்களம்.
- இலஞ்ச ஊழல் விசாரணைகள் ஆணைக்குழு.
- தேசிய பொலிஸ் ஆணைக்குழு.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய...

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகளின் உரை மற்றும் நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மீண்டும் இந்த நாட்டில் பயங்கரவாதம் இடம்பெறுவதை இந்த நாட்டில் உள்ள எவரும் விரும்பமாட்டார்கள்.

நாட்டை கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் சுட்டிக் காட்டினார். (ம-7)

## இரட்டைக்...

தொண்டைமானாறு வல்வை வீதியைச் சேர்ந்த நி.விதுஷா (வயது-25) என்ற இளம் தாயே உயிரிழந்துள்ளார்

கடந்த வருடம் திருமணம் செய்த குறித்த பெண் பிரசவத்திற்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த சில தினங்களுக்கு முன் குறித்த பெண்ணுக்கு இரட்டை பெண் குழந்தைகள் பிறந்ததாக தெரிக்கப்படுகின்றது. நல்ல உடல் நலத்துடன் தாயும் இரு குழந்தைகளும் காணப்பட்டனர்.

இந்நிலையில் தாய் திடீரென நேற்று முன்தினம் உயிரிழந்தமை அதிர்ச்சியையும் துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (ம-7,33)

## மின்சாரம்...

யில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் குறித்த நிறுவனத்தில் பணியாற்றும் சாவகச்சேரி நுணாவில் பகுதியைச் சேர்ந்த கஜந்தன் (வயது-26) எனும் இளைஞனே உயிரிழந்துள்ளார்.

அலுவலகத்தில் பணியில் இருந்த வேளை, தண்ணீர் வராததால், தண்ணீர் தொட்டியை பார்ப்பதற்காக சென்ற வேளை, அங்கிருந்த மின் வயரில் ஏற்பட்ட சேதம் காரணமாக பணியாளருக்கு மின்சாரம் தாக்கியுள்ளது.

அதனையடுத்து அலுவலகத்தில் கடமையில் இருந்த ஏனையவர்கள் இளைஞனை, சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,30,33,104)

## சாதாரண...

படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், 2024ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சையை மே அல்லது ஜூன் மாதத்தில் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## 34 கிலோ...

கைப்பற்றப்பட்டது.

சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் தாளையடியைச் சேர்ந்த 24 வயதுடைய நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்படை மற்றும் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த நடவடிக்கையின் மூலம் மண்ணுக்குள் புதைக்கப்பட்ட 03 பிளாஸ்டிக் பரல்களில் அடைக்கப்பட்டிருந்த 17 பார்சல்களில் கேரள கஞ்சா மீட்கப்பட்டது.

கண்டுபிடிக்கப்பட்ட கேரள கஞ்சா சுமார் 34 கிலோ 400 கிராம் எடை கொண்டது எனவும் மொத்த மதிப்பு 13 மில்லியன் ரூபாய் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ம-7,33)

## அரசியல் தீர்வை...

சிங்கள ஊடகம் ஒன்றின் சிரேஷ்ட ஊடகவியலாளருக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "சம்பந்தனையும் அவரின் கட்சியையும் நாங்கள் மதிக்கின்றோம். கஜேந்திரகுமாரையும் அவரின் கட்சியையும் நாங்கள் மதிக்கின்றோம்.

விக்னேஸ்வரனையும் அவரின் கட்சியையும் நாங்கள் மதிக்கின்றோம். ஆனால், இந்த மூன்று தரப்பினரும் வெளியில் இருந்து கொண்டு அரசியல் தீர்வு வேண்டும் என்று கோருகின்றார்கள்.

அவர்கள் அனைவரும் ஜனாதிபதியுடன் இணைந்து ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்தினால் தீர்வை விரைவில் வென்றெடுக்க முடியும்.

அவர்கள் வெளியில் தனியே நின்று கட்சி அரசியல் செய்வதால் மக்களுக்கு எந்தப் பயனும் கிடைக்காது. தீர்வை வென்றெடுக்கக் கிடைத்துள்ள அருமையான சந்தர்ப்பத்தைத் தமிழ்க் கட்சிகள் தவறவிடக்கூடாது" என்றார். (ம-7)

## நினைவேந்தல்...

தென்னிலங்கை அரசியலில் சர்ச்சையாக மாறியுள்ள நிலையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றின் சிரேஷ்ட ஊடகவியலாளருக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"மீண்டுமொரு ஆயுதப் போரை தமிழர்களோ, சிங்களவர்களோ அல்லது முஸ்லிம்களோ விரும்பவில்லை.

எனினும் கடந்த காலத்தில் இடம்பெற்ற ஆயுதப் போரில் உயிரிழந்தவர்களை அவர்களின் உறவுகள் அமைதியாகநினைவேந்த அனுமதி வழங்கப்பட வேண்டும். இதை எவரும் இனவாத ரீதியில் அல்லது அரசியல் ரீதியில் பார்க்கக்கூடாது." - என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

"தேசிய ரீதியில் எழுந்துள்ள பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும். தமிழர்களும், அவர்களின் பிரதிநிதிகளும் இதைத்தான் விரும்புகின்றார்கள். எனவே, தீர்வை நாம் விரைவில் வழங்க வேண்டும். கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் நான் உரையாற்றும்போதும் இதனைக் குறிப்பிட்டுள்ளேன் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.(ம-7)

## சித்திரவதை...

டன.

சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஷ் அவர்கள் உடனிருக்க, யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் ரி.மேனன் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொண்ட குழு விசாரணைகளை முன்னெடுத்தது.

இதன்போது உயிரிழந்த இளைஞனுடன் உடனிருந்த மூன்றாவது சாட்சியான மற்றைய இளைஞன், சித்திரவதைக்கு உட்படுத்திய பொலிஸ் நிலையத்திற்குள் உள்ள இடங்களை காண்பித்தார்.

இவற்றினை பார்வையிட்டு ஆய்வுகளை முன்னெடுத்த பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான குழுவினர் சுமார் ஒன்றரை மணித்தியாலம் வரை விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-7,9,104)

லக்கி 7 VIP
திகதி 2023.11.28 சீட்டிழுப்பு இலக்கம் 138
N 7 5 1 1 0 6 N

தன நிதானய
திகதி -2023.11.28 சீட்டிழுப்பு இலக்கம் - 1342
K 09 41 64 65 K
Double Chance 49430

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3554
சீட்டிழுப்பு திகதி 28.11.2023
J 08 40 55 71
J 52956

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.28
சீட்டிழுப்பு இலக்கம் 0621
தனுசு 10 18 40 52 தனுசு
35288 30

மஹஜன சம்பத
திகதி 2023/11/28
சீட்டிழுப்பு இலக்கம் 5312
S 9 3 1 9 5 2

மெகா பவர்
திகதி 28/11/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1660
J 12 28 51 54 79
57066

சுப்பர் தன சம்பத
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி 28.11.2023 வெற்றி வாரம் 020 வர்ணம் சிவப்பு
U 0 6 9 2 7 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 22,470,339.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2286 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.11.28 தினம் செவ்வாய்க்கிழமை
14 36 37 73 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,594,772/-

சனிதா
திகதி 2023.11.28 வெற்றி வாரம் 4447 வர்ணம் பச்சை
21 26 47 54 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,209,332.00

சசிரி
வெற்றி வாரம் 408 2023.11.28
09 39 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,515,000/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3998 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.11.28 தினம் செவ்வாய்க்கிழமை
15 37 40 51
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,493,780/-

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 26 26 32 39 52
1462 2023.11.28 சவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 470,645,664.20

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை வெற்றி வாரம் : 2112
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.72,284,416/-
சீட்டிழுப்பு திகதி : 2023.11.28
17 19 40 42 S

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"

## TECHNO WORLD

A/L தொழில்நுட்பப் பிரிவு

A/L 2023 பரீட்சைக்கு தோற்ற இருக்கும் அனைத்து மாணவர்களுக்குரிய

### இலவசக் கருத்தரங்கு

**29 November 2023**
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்

**30 November 2023**
பொறியியல் தொழினுட்பவியல்
உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்

'காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை'

இடம் : வெலிங்டன் சந்தி,லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்

(C-7744)

**077 017 5346**

---

## கடை வாடகை

அச்சுவேலி வடக்கில் சனசமூக நிலையத்திற்கு அண்மையில் (வல்லை வீதி) 40' X 40' மொத்த அளவுடைய மூன்று கடைகள்
முதலாவது - 16' X 40'
இரண்டாவது - 12' X 40'
மூன்றாவது - 12' X 40'
முழுமையாக ஒரு கடையாகவும் அல்லது தேவைக்கேற்ப மூன்று பிரிவுகளாக பிரித்துக் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு (18034)

**077 515 3580**
**077 307 3840**
**075 490 3861**

---

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378**
**076 097 3127**

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18013)

**076 825 7716 (ஆகாஸ்)**

---

## வணிகக்கல்வி

### தொடர் செயலமர்வு
### 2023 A/L, 2022(R) A/L

ஆரம்பம் : 03.12.2023 பி.ப 1.00 மணி
ஞாயிற்றுக்கிழமை

இடம் : பொருளியற் கல்லூரி யாழ்.நகர்

வழிகாட்டல்களை வழங்குபவர்
**சக்திவடிவேல் பிரதீபன்**
HNDA, M.Com, PGDE
ஆசிரியர் – யா/வட்டு இந்துக் கல்லூரி

குறிப்பு
- வெளி மாணவர்களும் பங்குகொள்ளலாம்.
- நேரடியாக பங்குகொள்ள முடியாத மாணவர்கள் வெளி மாவட்ட மாணவர்கள் Zoom ஊடாக பங்குகொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு
**076 216 1532, 077 602 7511** (C-7750)

---

## விரைவு பொதிகள் சேவை

DHL
வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன. (18039)

Lanka Cargo Worldwide Express

பணியாளர் தேவை

இல. 315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**070 375 0002**

---

## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7751)
**0777-068-777**
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

---

## Canada and Italy Visa

(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும்.மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

பணியாளர் தேவை (18039)

VISA CONSULTANT
134, Adiyapatham Road,Thirunelvely, Jaffna.
**077 038 5584**

---

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-7751)

V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
**0777-068-777**
v2vacancies@gmail.com

---

## கீரிமலை நகுலேஸ்வரம் சிவன் திருத்தேர் அமைத்தலுக்குரிய விண்ணப்பங்கள் கோரல்

01. இத்திருத்தலத்திற்குரிய பிரதான தேர் ஆகம சிற்ப சாஸ்திர அடிப்படையில் அமைக்கப்பெறுவதற்கு திருவருள் கூடியுள்ளதால் தகுதியுள்ள ஆர்வமுள்ள ஆசாரியார்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்பட உள்ளது.
02. மேலதிக அமைப்பு விபரங்களையும் விண்ணப்ப படிவத்தையும் ஆதீனகர்த்தாவிடம் 06.12.2023 க்கு முன்னதாக தினமும் பகல் 10 மணியிலிருந்து 1 மணி வரையான காலப்பகுதியில் நேரில் தொடர்பு கொண்டு பெறலாம்.
03. ஒப்பந்த அடிப்படையில் ஒருவருட காலப்பகுதிக்குள் திருப்பணிச் சபையூடாக தேர் உருவாக்கம் நிறைவடைய விரும்பப்படும்.

ஆதீனகர்த்தா
சிவஸ்ரீ ந. குமாரசுவாமி குருக்கள்
தொ.இல.
உபயகாரர் (C-7737) **077 636 6338**

---

## காணி விற்பனைக்கு

GOLDEN Real Estate

**கைதடிச் சந்திக்கு அருகாமையில் 33 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.**


- கைதடிச் சந்தியில் இந்து 250m தூரத்தில்
- வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம்
- 20 அடி பாதை
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
- நன்னீர் ஊற்று நிலம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
- வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
- வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
- சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

(18036)

**071 173 3911,**
**076 853 5022, 076 213 7239**

---

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின்
விஞ்ஞான பாட ஆசிரியர்
திருமதி றொஜனி தர்மயூதி
அவர்களின் அன்புத் தந்தையார்

### யோசப் எட்வேட் இராசநாயகம்

(ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர் - நீர்ப்பாசன திணைக்களம்)

அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/சென்.மேரிஸ் வித்தியாலயம் (OLR) (18032)


---

கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை
மானிப்பாய்

முதன்முறையாக மானிப்பாயில்
புதியதோர் ஆரம்பம்

## கதிரியக்க அலகு

உங்கள் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில்





Digital X-Ray Unit (C-7745)

முன் பதிவுகளுக்கு :- 0770661031 0212255157

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org